
உ
சிவமயம்

"HERITAGE OF CHETTINAD"

"செட்டிநாட்டுக் கலாச்சாரம்"



வாழ்க வளமுடன்

கல்வி ஆலோசகர்,
அண.பெரிச்சியப்பன்

Educational Advisor,
AN.PERICHIAPPAN

முதற் பதிப்பு : ஏப்ரல் 2005.

"செட்டி நாட்டுக் கலாச்சாரம்" *HERITAGE OF CHETTINAD*

By:

Dr. Radhakrishnan Awardee, Educational Consultant:

AN. PERICHIAPPAN B.Sc., M.A.,M.Ed.,P.G.D.C.A.

KOTHAMANGALAM-630 105,

Sivagangai District, S India.

Mobile: 94438-51434

புவனா பிரிண்டர்ஸ்,

கடியாபட்டி, ராமச்சந்திரபுரம்-622 505. போன்: 04333-272112.

உ
சிவமயம்

திருவிளக்கு வழிபாடு

அண்டங்கள் தோறும் அளவற்ற நிலையில் அனைத்திலும் அடங்கி ஆழ்ந்திருக்கும் முதலும் முடிவும் அற்ற அறவாளி அந்தணனான அண்டநாயகன் என்னும் ஆண்டவனை ஆதியில் நம் ஆன்றோர் சோதியாம் ஒளி வழியில் தான் வணங்கி வழிபாடு செய்து வந்தார்கள். திருக்கோவில்களிலும், திருமனைகளிலும், திருமணங் களிலும் திருவிளக்கில் ஒளி ஏற்றி அதன் வழி அருட் கொடையோனான அழல் வண்ணன் என்னும் ஆதிபகவனை வணங்கி வழிபடும் வழிமுறை தொன்று தொட்டு இன்றுவரை நன்றே நடந்து வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆண்டவன் தன் அருள் வடிவமாக விளங்கி அனைத்து உயிர்க்கும் அன்னையாக அமைந்து, அவ்வளவையும் அருள் கூர்ந்து ஆதரித்து அன்புடன் காத்து வருபவள் ஆதிபராசக்தி. இன்னருள் புரிந்து எந்நாளும் இனிதே எல்லோரையும் காக்கும் இந்த மகாசக்தி, இறைவன் தன்இடபாகத்தில் இடங்கொண்டு இணைந்துள்ளான். அவளது அருளை வேண்டும் முறையில் சிறப்பாக அன்னையாம் இறைவியைத் திருவிளக்கு வழியே நாம் மனமார அன்புடன் வழிபாடு செய்வதுதான் **திருவிளக்கு வழிபாடு** என்பதாகும்.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமசி வாயமே.

உ
சிவமயம்

நகரத்தார் திருமண நடைமுறை விளக்கம்

1. நிச்சயதார்த்தம் :-

ஓர் நல்ல நாளில் பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும், குறிப்பிட்ட இடத்தில் கூடி ஸ்ரீதனம் சீர்முறைகளைப் பேசி, இரண்டு நோட்டுப் புத்தகங்களில் எழுதி மஞ்சள் தடவி, முகூர்த்த நாள் பார்த்த சிட்டையையும், ஒருவருக்கொருவர் தாம்பூலத் தாம்பாளத்தில் வைத்து, கொடுத்து வாங்கிக்கொள்ள வேணும். அதுசமயம் மாப்பிள்ளை வீட்டார் தேங்காய், பழம், மலர் கொண்டுவந்து கொடுத்தல் வேண்டும்.

(நாள் பார்க்கும் சிட்டையில் முகூர்த்தக்கால் நட்டு கல்யாணம்சொல்லும் நேரம், கழுத்துருவுக்கு பொன் கொடுக்கும் நேரம், திருப்பூட்டும் நேரம், குடி அழைப்பு, பெண் அழைப்பு நேரங்கள் குறித்து எழுதி வாங்க வேண்டும்.

2. முகூர்த்தக்கால் ஊன்றுதல் :-

குறிப்பிட்ட நல்ல நாளில் கொட்டகைக்காரர் வந்து வீட்டின் வாசலில் ஈசானிய மூலையில் (வடகிழக்கு மூலை) மஞ்சள், குங்குமம் தடவிய ஒரு மூங்கில் கம்பின் முனையில் மாவிலை கட்டி ஊன்றி வைப்பார். அதற்குத் தேங்காய் உடைத்து கற்பூரம் தீபம் காட்டுவார். இது இரு வீட்டிலும் நடைபெற வேண்டிய நிகழ்ச்சி. தட்சணை கொடுக்க வேண்டும்.

3. சுவாமிக்கு பணம் முடிவது :-

அவரவர் குலதெய்வங்களுக்கும், பழக்கப்படி பணம் எடுத்து முடியும் சாமிகளுக்கும் பணம் எடுத்து முடியவேண்டியது. படைக்கும் பழக்கம் உள்ளவர்கள் அவரவர் வீட்டுப் பழக்கப்படி படைக்க வேண்டியது.

4. கல்யாணம் சொல்லுதல் :-

இரண்டு தேங்காய், வெற்றிலை, பாக்கு ஒரு ரப்பர் வாளியில் வைத்து, முதலில் பெரிய வீட்டிலும், அடுத்து அத்தை வீடு, ஆயாள் வீட்டிலும் (மாமக்காரர் வீடு) கல்யாணம் சொல்ல வேண்டும். அதில் 16/- ரூபாய் வைக்க வேணும்.

5. கோவிலில் பாக்கு வைத்தல் :-

திருமணத்திற்கு சரியாக மூன்று நாட்களுக்கு முன்னர் இருவீட்டாரும் அவரவர்கள் சார்ந்துள்ள கோயில்களுக்குத் தங்கள் பங்காளி ஒருவரை அனுப்பி மணமகள்/மணமகன் கோயில், பிரிவு, ஊர், முகவரி, திருமணம் நடைபெறும் நாள், நேரம், இடம் முதலிய விபரங்களைக் கோயில் பதிவேட்டில் பதிந்து அதற்குரிய காணிக்கையை செலுத்திவர வேண்டும். (உதாரணமாக புதன்கிழமை திருமணம் எனில், ஞாயிறு அன்று பாக்கு வைத்தல் வேண்டும்) குறிப்பாக இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி கோவில்காரர்கள் இளையாற்றங்குடிக் கோவிலுக்கும் பாக்கு வைக்க வேண்டும்.

6. முளைப்பாலிகை தயார் செய்தல் :-

திருமணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் மணமகன் வீட்டில் முளைக்கும் திறனுள்ள நெல், உளுந்து, கடலை, கொள்ளு, எள், சாமை, தினை, துவரை, பாசிப் பயிறு ஆகிய ஒன்பது வகைத்தானியங்களைக் கலந்து இளம் சுடுநீரில் சுமங்கலியர் ஊறவைத்து, திருமணத்திற்கு முதல் நாளிரவு அதனைச் சிகப்புத் துணியில் கட்டி ஒரு பாத்திரத்தில் வைத்து, திருமண நாளன்று மணமகள் வீட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

7. கோட்டை நெல் கட்டுதல் :-

ஒரு மரக்கால் நெல்லை (பெ. படி 2) ஒரு துணிப் பையில் கட்டி, வைக்கோல்புரியால் சுற்றிக்கட்டிய நெல்கோட்டையைத் திருமண நாளன்று மணமகள் வீட்டிற்கு கொண்டு செல்ல வேண்டும்.

திருமணத்திற்கு முதல் நாள்

8. கூடி ஆக்கி உண்ணுதல் :-

திருமணத்திற்கு முதல்நாள் உறவினர்கள் எல்லோரும் கூடி, ஆக்கி உண்ணும் நிகழ்ச்சி இது. நம்மில் பெரும்பாலோர் "படைப்பு" என்று நம் முன்னோரை வழிபடுகின்ற நாளாக இதனை அமைத்து உள்ளனர்.

9. திருவிளக்கு ஏற்றுதல் :-

அப்பத்தாள் அல்லது அத்தையை அழைத்து நடு வீட்டில் விளக்கு ஏற்றச் சொல்ல வேண்டும்.

10. கொழுமேளம் :-

மேளகாரர்கள் வந்ததும், சங்கு ஊதி நல்ல காரியத்தைக் கொழுகும் மேளத்தை வாசிக்கச் செய்யவேண்டும்.

11. மனை போடுதல் :-

பெண் வீட்டில், சுமங்கலிப் பெண்கள், மலர், குங்குமம்,சந்தனம், குழைத்து வைத்துள்ள மண்ணை எடுத்து ஐந்து செங்கற்களின்மேல் வைத்து சங்கு ஊத அதன்மேல் மனையை எடுத்துவைக்க வேண்டும்.

12. கோவில் மாலைகள் வாங்குதல் :-

இரு வீட்டாரின் கோயில்களிலிருந்தும் வயிராவி மாலை கொண்டு வரும்போது, விளக்கேற்றி சங்கு ஊதி, மாலையை வாங்கி, நடு வீட்டிற்குள் ரப்பர் வாளியில் வைக்க வேண்டும்.

13. மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல் :-

ஆசாரியை வரச்சொல்லி மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவிக்க வேண்டும். (மாலை 6-00 மணிக்கு மேல்)

14. தும்பு பிடித்துக் கோலமிடல் :-

இருவீட்டாரும், வளவுப் பங்காளி வீட்டுப் பெண்டுகளை வைத்து, திருமணம் நிகழ்கின்ற அறையின் வெளிச்சுவற்றிலும், உள் வீட்டுச்சுவற்றிலும், கதவிலும் ஏட்டுக்கயிறு கொண்டு தும்பு பிடிக்க வேண்டும்.

15. மாற்றுக் கட்டுதல் :-

நீல நிறம அல்லது பிறநிற மாற்றினை சலவைத் தொழிலாளியை கொண்டுவரச் சொல்லி மணமேடைக்கு மேலேஉள்ள விட்டத்தில் கட்டச் சொல்லவேண்டும். (மணமகள் மீது பல்லியோ, பூச்சியோ விழுந்து விடாமல் பாதுகாப்பதற்காக)

16. அரசன் ஆணைக்கால் கட்டுதல் :-


பெண் வீட்டில் மனைக்கு எதிரில் கோலமிட்ட இடத்தில் பங்காளிகளைக்கொண்டு அரசாணி மேடையை வைத்து அதிலுள்ள பள்ளத்தில் பாலை ஊற்றி ஒரு பவளம் அல்லது சிவப்பையும் 0-25 பைசா நாணயத்தையும் போட்டு, அதன்மேல் மூங்கில் கம்பை ஊன்றி அத்துடன் கிளுவை, பாலைக் குச்சிகளையும் நட்டு, அரசு இலை, மாவிலைகளைக்கொண்டு அதைச் சுற்றி கீழிருந்து மேலாக கயிறு கொண்டு கட்ட வேண்டும். இதற்கு பிடிதரமாக ஆறடி உயரத்தில் குறுக்கு கம்பு கொடுத்து சேர்த்துக் கட்டவேண்டும். உயரம் குறைந்த ஸ்டூலில் சரவிளக்கை வைத்து நல்லெண்ணை தீபமிட வேண்டும்.

17. பெண் வீட்டில் கழுத்துரு வாங்கி வந்து கோர்த்தல் :-

வள்ளுவப் பையில் வெற்றிலை,பாக்கு, விறலி மஞ்சள்,எழுத்தாணி, குலம் வாழும் பிள்ளை, சிவப்பு டவல், ஆகியவற்றை வைத்து பங்காளிகள் இருவர் திருமணத்திற்கு முதல்நாள் பெண் வீட்டிற்குச் சென்று, கழுத்துரு உருப்படிகள் 31-ம், குச்சி, தும்பு, துவாளை உருப்படி 3-ம்,பிள்ளைத்தும்பு 1-ம், சிறுதாலிச் சோடிப்பையும் வாங்கி, சிகப்புத் துண்டில் முடிந்து வள்ளுவப்பையில் வைத்து வாங்கி வர வேண்டும்.

பின்னர் பங்காளிகளில் இரு பெரியவர்கள் கண் மார்க் நூல் கண்டில் 21 பாகம் எடுத்து அதை முப்பிரியாக வரும்படி பின்னி திரித்து நன்றாக முறுக்கி மஞ்சள் தடவி 7பாகமாக கிடைத்த சரடை, இரண்டாக மடித்து, படத்தில் கண்டுள்ளபடி உருப்படி 31-யும், திருமாங்கல்யமுள்ள மேல் பாகத்தில் 16 உருப்படிகளும், லெட்சுமி ஏத்தனமுள்ள கீழ் பாகத்தில் 15 உருப்படிகளும் வரிசைப்படி கோர்த்து, பின் இரண்டையும் இரு முனைகளிலும் உருவி வராதபடி முடிச்சுப்போடவேண்டும். பெண்ணழைத்த

கழுத்துரு



௭

1, 16, 17, 31 - கடைமணி

2, 3,4, 6, 8, 10, 12, 14 ,15, 18, 19, 20, 22, 23, 25 26, 28,29, 30 > உரு

5, 13, 21, 27 - ஏத்தனம்

7, 11 - சரிமணி

24 - லட்சுமி ஏத்தனம்

9 - திருமாங்கல்யம்

வீட்டிலோ, அல்லது ஐந்து மருந்து குடிக்கும் நாளிலோ,குச்சி, தும்பு, துவாளை மூன்றையும் கழுத்துருவில் சேர்த்துக்கட்டி கழுத்தில் அணிந்துகொண்டு சாமி கும்பிட்டபின் கழட்டிவைக்க வேண்டும்.

பிள்ளைச் சரடு இழைதல் : இதைப்போல 7 பாகம் நூல் எடுத்து 3-ல் ஒரு பங்காகப் பின்னி மஞ்சள் தடவி அதில் ஒற்றைத் தும்பை கோர்த்து வைத்துக் கொள்ளவேண்டும்.

திருமணத்தன்று பெண் வீட்டில்

18. பூரம் கழித்தல் :-

திருமணத்தன்று அதிகாலையில் பெண்ணுக்கு பூரங் கழிக்க குருக்கள் ஐயரை கூட்டிவரச் சொல்லி பெண்ணுக்கு அம்மான் மனைவி உடனிருக்க குருக்கள் சிட்டைப்படி சாமான் கொடுத்து பூரம் கழிக்கச் சொல்லிய பின்னரே பெண் குளிக்க வேண்டும். வேப்பிலையை பெண்ணின் தலை, தோள்பட்டைகள், இடுப்பின் இருபக்கங்கள், இரு பாதங்கள் ஆகிய ஏழு இடங்களில் வைத்து இரும்புச் சத்தகம் அல்லது சோத்து மாறினால் தட்டி விடுவார்கள். பெண்ணின் தாய் அல்லது அத்தை தான் பூரம் கழிப்பார்கள்.

19. கழுத்துருவுக்கு பொன் கொடுத்தல் :-

குறிப்பிட்ட நேரத்தில் மாப்பிள்ளை வீட்டிலிருந்து பங்காளிகள் இருவர் வெள்ளி அல்லது எவர்சில்வர் டப்பிகளில் பொன் சந்தனம், குங்குமம், மலர், கற்கண்டு, மஞ்சள், வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழ வகைகளுடன் பெண் வீட்டிற்குச் சென்று அங்கு உறவினர், பங்காளிகள் முன்னிலையில் பொற்கொல்லர் ஒருவர் வந்து பொன்னை, வாங்கித் தட்டிக்கொடுப்பதை பெண்வீட்டார் வாங்கி கல்யாண நடு வீட்டில் வைக்கவேண்டும். பின்னர் அந்த பொற்கொல்லருக்குத் தகுந்த மரியாதைகள் செய்து அனுப்பவேண்டும்.

20. மாப்பிள்ளை தன் வீட்டிலிருந்து புறப்படுதல் :-

குறித்த நேரத்தில் மாமக்காரர் கைப்பிடிக்க, மாப்பிள்ளை நடு வீட்டில் உட்கார்ந்து மாலை போட்டு டார்பன் வைத்து, விபூதி பூசி

அழைத்துவர மாப்பிள்ளையின் அப்பத்தாள் நடுப்பத்தியின் கோலத்தின் முன் வீட்டைப் பார்த்து நிற்கச்செய்து விளக்குவைத்து, விபூதிபூசி, அழகு ஆலத்தி எடுக்க வேண்டும். மாப்பிள்ளையின் தகப்பனார் அல்லது வீட்டிற்கு பெரியவர்கள் தேங்காய்ச் சட்டியுடனும், தாயார் திருப்பூட்டு தாம்பாளத்துடனும், சகோதரி கெண்டிச் செம்புடனும், சங்கு ஊதி வள்ளுவப்பையுடனும், மாப்பிள்ளையை அழைத்துச்சென்று காரில் அனுப்பி வைக்க வேண்டியது. மாப்பிள்ளையுடன் மாமக்காரர், தாயார், சகோதரி செல்ல வேண்டும்.

21. மாப்பிள்ளை கோவிலுக்கு சென்று வருதல் :-

மாப்பிள்ளை அழைப்புக்கு முன்போ, பின்போ அவ்வூரில் உள்ள பிள்ளையார்கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து வழிபட்டு வருதல் வேண்டும். மாப்பிள்ளை அழைக்குமிடம், கோவிலில் சுவாமி தரிசனம், அர்ச்சனைக்கு பெண் வீட்டார் ஏற்பாடு செய்ய வேணும்.

22. மாப்பிள்ளை அழைப்பு :-

பெண் வீட்டார் தங்கள் வீட்டுப் பெரியவர்களிடம் மாப்பிள்ளை அழைப்பதற்கு எடுத்துவைத்த சாமான்கள் அடங்கிய தாம்பாளத்தைக் கொடுத்து, எடுத்துவரச் சொல்லப் பெண்டுகள் உடன்வர மாப்பிள்ளை வந்து, இறங்கி இருக்கும் இடத்திற்கு 2 சிலேட்டு விளக்கு, விபூதி, தாம்பாளம் மேளத்துடன்வர வேண்டும்.

அங்கு பங்காளியில் பெரியவர் மாப்பிள்ளைக்கு விபூதி பூசி மோதிரம், செயின், கடிகாரம் போட்டு, ஜரிகை வேஷ்டியை மாலைக்கு கீழே செருக வேண்டும். பின்னர் எலுமிச்சம் பழத்தை கையில் கொடுத்து பூச்செண்டும் கொடுத்து மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வர வேண்டும். அப்போது மாப்பிள்ளையின் தாயார், பெண்ணுக்கு உள்ள சேலை, திருப்பூட்டு மாலை, கழுத்து உரு, சிறு தாலி, கோயில் மாலைகள் முதலியவைகள் உள்ள தாம்பாளத்தை எடுத்து வர வேண்டும். தகப்பனார் தேங்காய்ச் சட்டியை எடுத்து வர வேண்டும்.

மாப்பிள்ளை அறிதல்

உள்ளூர் மாப்பிள்ளையாக இருந்தால் மாப்பிள்ளை வீட்டிற்கு அனைவரும் சென்று மேலே குறிப்பிட்டவாறு செய்து அழைத்து வர வேண்டியது. மாப்பிள்ளையும் பெண்ணும் வீட்டு வாசல் படிகளில் ஏறும் பொழுது வலது காலை முதலில் எடுத்துவைத்து ஏற வேண்டும்.

23. விளக்கு வைப்பது :-

மாப்பிள்ளையை அழைத்து பெண் வீட்டிற்கு கூட்டி வரும்போது நடுப்பத்திக் கோலத்தில் முன் நிற்க வைத்து பெண்ணின் அப்பத்தாள் அல்லது அத்தை வந்து ஆலத்தி எடுத்து விபூதி பூசி, மாப்பிள்ளையை நடு வாசலில் கிழக்கு முகமாக உட்கார வைப்பார்கள்.

24. பகவத்யானமும் - காப்புக் கட்டுதலும் :-

மாப்பிள்ளையை அழைத்து வந்ததும், முதலில் மாப்பிள்ளைக்கும் பிறகு பெண்ணுக்கும், புரோகிதரைக் கொண்டு பகவத்யானம் செய்விக்க வேண்டும். அதுசமயம் அவரவர் மாமக்காரர் கொண்டு, வலது மணிக்கட்டில் 0-25 பைசா காசை சிகப்பு ரிப்பனில் முடிந்து முனை முறியாத விரலி மஞ்சளையும் சேர்த்து காப்பு கட்டுதல் வேண்டும். அதன் பின்னர் முதலில் மாமக்காரர் , அடுத்து உறவினர் பூமணம் இடல் வேண்டும். மாப்பிள்ளைக்கு பகவத்யானத்தின் போது தலைச்சீலையில் பணம் முடிய வேண்டும்.

இங்ஙனம் இருவருக்கும் காப்பு கட்டி முடிந்ததும், திருமாங்கல்யத்திற்கு புரோகிதர் பூஜை செய்து தருவார். அதை நடு வீட்டில் கொண்டு போய் வைக்கவேண்டும்.

25. திருப்பூட்டுதலுக்கு ஆசீர்வாதம் வாங்குதல் :-

பெண் வீட்டு மாமக்காரர் திருப்பூட்டுதற்குரிய மங்கலப் பொருள்களுள்ள தாம்பாளத்தை நடு வீட்டிலிருந்து எடுத்து வந்து வருகை தந்திருக்கும் எல்லோரிடமும் காட்டி வாழ்த்துப் பெற்று நடு வீட்டில் கொண்டுபோய் வைத்தல் வேண்டும்.

26. திருப்பூட்டுதல் :-

மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த திருப்பூட்டுச் சேலை முதலியவற்றை அணிவித்துக்கொண்டு பெண்ணின் மாமக்காரர் பெண்ணைக் கூட்டி வந்து மனையின் மேல் அரசு ஆணைக்காலை நோக்கி நிற்க செய்ய வேண்டும். பிறகு மாப்பிள்ளையின் மாமக்காரர் மாப்பிள்ளையை கூட்டி வந்து பெண்ணுக்கு எதிரில் தடுக்கின் மேல் நிற்க செய்ய வேண்டும். பெண்ணின் கையில் தேங்காய், வெற்றிலை, பாக்கு மஞ்சள், பச்சரிசி, ஆகியவற்றை கொடுக்க வேணும். பெண் இரண்டு கையாலும் அவற்றை வாங்கி, தேங்காய் மாப்பிள்ளையை நோக்கி இருப்பதைப்போல் வைத்துக்கொள்ள வேண்டும். முதலில் கோயில் விபூதியை தான் பூசிக்கொண்டு, பிறகு பெண்ணுக்குப் பூச வேண்டும். பிறகு கோயில் மாலையை எடுத்து பெண்ணுக்கு அணிவித்தபின், கழுத்துருவை நிதானமாக எடுத்து பெண்ணுக்கு அணிவித்தபின் மூன்று முடிச்சு போட வேண்டும். பிறகு சிறு தாலியை அணிவிக்க வேண்டும். அதன்பின் திருமாங்கல்யத்திலும் கழுத்துருவின் மூன்று முடிச்சுகளிலும், சிறுதாலியிலும் மஞ்சள் தொட்டுவைத்து குங்குமம் வைக்க வேண்டும். இதுசமயம் பெண்ணுக்கு நாத்தினார் பெண்ணுக்கு பின் இருந்து உதவி செய்தல் வேண்டும்.

பெண்ணின் கையில் உள்ள பச்சரிசி, தேங்காய் முதலியவற்றை தாம்பாளத்தில் வைக்கச் சொல்லிவிட்டு, மூன்று முறை மாலை மாற்றிக்கொள்ள வேண்டும். முதலில் மாப்பிள்ளைதான் மாலையிட வேண்டும. மணமக்கள் ஒருவருக்கொருவர் மிட்டாய் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

திருப்பூட்டி முடிந்ததும், மணமக்கள் மாமக்காரருடன் வளவு முகப்பிலுள்ளவர்களிடம் போய் வணங்கி ஆசீர்வாதம் பெற வேண்டும்.

திருப்பூட்டுதலின் போதும், மாலை மாற்றும் போதும்,கெட்டி மேளம் வாசிக்கச் சொல்ல வேணும். அப்போது அனைவருக்கும் ரொட்டி, மிட்டாய், குளிர் பானம் கொடுக்க வேண்டும்.

திருப்பூட்டும் முறைகள் :

நகரத்தார் திருமணங்களில் திருப்பூட்டுதல் மூன்று விதமாக நடைபெறுகிறது. மேல வட்டகை எனப்பெறும் வலையப்பட்டிமேலைச்சிவபுரி குழிபிறை ஆகியபகுதிகளில் மாப்பிள்ளை மனையில் நிற்க பெண் கீழே நிற்க திருப்பூட்டப் பெறுகிறது கீழ வட்டகை எனப்பெறும் காரைக்குடி தேவகோட்டை பள்ளத்தூர் ஆகிய பகுதிகளில் பெண் மனைமீது நிற்க. மாப்பிள்ளை கீழே நிற்க திருப்பூட்டப் பெறுகிறது. தெற்குவட்டகை எனப்பெறும் நாட்டரசன்கோட்டை. ஒக்கூர் அலவாக்கோட்டை ஆகிய பகுதிகளில் அறைக்குள் மாப்பிள்ளையும். பெண்ணும் சரிசமமாக நின்று திருப்பூட்டப்பெறுகிறது.

27. இசைவுப் பிடிமானம் எழுதுதல் ;

இசைவுப் பிடிமான வாசகங்கள் தற்போது அச்சிடப்பட்டு தயாராகக் கிடைக்கின்றன. இதில் தனித்தனியே இருந்தரப்பாரும் அவரவர்கள் கோயில்கள் பிரிவுகள் விவரத்தினைப் பங்காளியைக் கொண்டு நிரப்பி மணமக்களின் தந்தைமார்கள் இருவரும் நடுவீட்டில் அமர்ந்து கையெழுத்துச் செய்து மாப்பிள்ளைவீட்டார் எழுதியது பெண் வீட்டிலும் பெண் வீட்டார் எழுதியது மாப்பிள்ளை வீட்டிலும் இருக்கும் படியாக மாற்றிப்பெற்றுக்கொண்டு வைத்துக்கொள்ள வேண்டியது. இதில் எழுதிய பங்காளிகளும் கையொப்பம் இடவேண்டியது.

28. திருப்பூட்டுச் சடங்கு ;

பெண்ணை மனைமீது அரசாணைகாலுக்கு எதிரில் நிற்கச் செய்து பெண்ணின் மாமியார் அல்லது நாத்தினார் பெண்ணுக்கு எதிரில் தடுக்கில் நின்றுகொண்டு சடங்கு தட்டைக் கொண்டு வரச் சொல்லி சடங்கு தட்டில் உள்ள விபூதியை சடங்கு செய்பவர் தன் நெற்றியிலும், கழுத்திலும் பூசிக்கொண்டு பெண்ணிற்கும் அதேபோல பூசிவிட வேண்டும். சடங்குத் தட்டில் உள்ள நெல், மஞ்சள், பஞ்சு, உப்பு, புளி, ஆகிய ஐந்தையும் ஒவ்வொன்றாக மும்முறை தொட்டுச் சடங்கு செய்பவர்கள் தன் கழுத்திலும், பின்னர் பெண் கழுத்திலும் தொட்டுச் சடங்கு செய்ய வேண்டும்.

பின்னர் பெண்ணின் கையில் ஒரு வெற்றிலையை கொடுத்து இரு கைகளிலுமாக வைத்துக் கொள்ளச் சொல்லி சடங்கு செய்பவர் கையில் நிறை தாழியை வைத்துக்கொண்டு, வலது கையினால் கெண்டிச் செம்பிலுள்ள தண்ணீரைப் பெண்ணின் கையில் உள்ள வெற்றிலையில் ஊற்றவும். பெண் வெற்றிலையில் விழும் தண்ணீரைத் தன் பாதத்தின் கட்டை விரலில் ஊற்றிக்கொண்டு வெற்றிலை நுனியை தன் நெற்றியில் ஒற்றிக்கொள்ளுதல் வேண்டும். இது போன்று மூன்றுமுறை செய்தல் வேண்டும். இது முடிந்ததும் நிறை நாழியைப் பெண் தலையைச் சுற்றிக் கொடுத்து உள்ளே வைக்கவேண்டியது.

பின்னர் சடங்கு செய்பவர் சிலேட்டு விளக்கை இடது கையில் பிடித்துக்கொண்டு பெண்ணின் கையில் இருக்கும் வெற்றிலையில் வலது கையினால் கெண்டிச் செம்பிலுள்ள தண்ணீரை மூன்றுமுறை ஊற்றி மேலேகண்டபடி செய்ய வேணும். சிலேட்டு விளக்கை தலையைச் சுற்றாமல் கொண்டுபோய் வைக்க வேண்டும்.

பின்பு, சடங்கு செய்பவர் சடங்குக் குழவியை இடது கையில் பிடித்துக்கொண்டு வலது கையினால் கெண்டிச் செம்பிலுள்ள தண்ணீரை பெண்ணின் கையிலுள்ள வெற்றிலையில் மூன்றுமுறை ஊற்றி மேலேகண்டவாறு செய்ய வேண்டும்.

29. மணவறை ;

இரு மாமக்காரர்களும் மணமக்களை அழைத்து வந்து பெண்ணை மனையில் இடது புறமும், மாப்பிள்ளையை வலது புறமும் அரசு ஆணைக்காலை நோக்கி அமரச் செய்ய வேண்டும். பஞ்சாங்கக்காரர் விநாயகர் பூஜை, வர்ண கும்ப பூஜை செய்து அக்கினி வளர்த்து ஹோமம் செய்த பின் இரு வீட்டாருடைய மாமக்காரர்கள், உறவினர்கள், பங்காளிகள் ஒவ்வொருவராக வந்து முளைப்பாரியில் நவதானியம் போட்டு, பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பூமணம் இடவும் வேண்டும். பிறகு பெண்ணின் சகோதரர் மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளையின் சகோதரர் பெண்ணிற்கும் வாழைப்பழம் தடவுவார்கள்.

பிறகு மாப்பிள்ளை தலையில் எண்ணெய், சீயக்காய், தண்ணீர் முதலியவற்றை பெண்ணும், பெண்ணின் தலையில் எண்ணெய், சீயக்காய், தண்ணீர் முதலியவற்றை மாப்பிள்ளையும், மாவிலையால் தொட்டுவைக்க வேண்டும்.

பின்னர், மாப்பிள்ளை எதிரில் ஒரு முக்காலி வைத்து அதன் மீது ஒரு சட்டியை வைத்துஅதில் சோறு, பருப்பு, நெய், வாழைப்பழம் முதலியவற்றைப் பரிமாறியபின் மாப்பிள்ளை அதை சுவைத்துப் பார்க்கவேண்டும். பிறகு மாப்பிள்ளை கை அலம்புவதற்கு பெண் நீர் ஊற்ற வேண்டும.

பிறகு, மாமக்காரர்கள் இருவரும் மணமக்கள் தலைகளில் கொண்டை மாலைகளை மூன்றுமுறை மாற்றி மாற்றி வைப்பார்கள்.

பின்னர், பெண்ணின் தந்தை, அவரவர் வழக்கம்போல் ஒரு தொகையை மாப்பிள்ளையின் தலையில் வைக்க அதனை எடுத்து மாமக்காரர் மாப்பிள்ளையின் தந்தையிடம் கொடுக்க, பின்னர் இந்தத் தொகை பெண்ணுக்கு கொடுக்கும் ஸ்ரீதனப் பணத்துடன் சேர்த்துக்கொள்ளப்பெறும். இதுவே தலைச்சீலையில் முடிதல் என்பதாகும்.

பிறகு மணமக்கள் முன் உள்ள முக்காலி மீது உள்ள சட்டியில் அரிசி, மஞ்சள், தேங்காய் இவற்றை வைத்து மாமப்பட்டினால் இரு மாமக்காரர்களும் மூடினாற்போல் பிடித்திருக்க மணமக்கள் இருவரும் அதை எடுத்து மூன்றுமுறை மாற்றிக்கொள்ள வேண்டும்.

மாமப்பட்டினால் அச்சட்டியினை மூடிய நிலையிலேயே எடுத்து மணமக்கள் இருவரும் எழுந்து அரசாணிக்காலையும், அக்கினியையும் சுற்றி வலம் வந்து மாமக்காரர்களுடன் நடு வீட்டிற்குள் அழைத்துச் செல்லும்போது நெல்கோட்டையை வைத்து தாண்டி உள்ளே சென்று அமர வேண்டும. பிறகு மாமக்காரர் அந்த மாமப்பட்டுத் துணியை விலக்கி பிறகு அந்தப் பொருள்களை அங்கு வைத்துவிட்டு எழுந்து வெளியே வர வேண்டும்.

30. வேவு எடுத்தல் ;

தலைப்பிள்ளைக்கு மட்டும் முதலில் மாமவேவு எடுத்தல் வேண்டும். அதற்கு பெண் வீட்டார் தயாரித்துள்ள பச்சரிசி, இலைக்கட்டு, பரங்கிக்காய், வாழைப்பழம், கற்கண்டு, மஞ்சள், பழங்கள் முதலியவற்றைப் பணியாட்கள் தலைமேல்வைத்து பெண்ணுக்கு ஆயாள் வீட்டுப் பங்காளிகள் எல்லோரும் மேளதாளத்துடன் கொண்டுவருவார்கள். பெண்வீட்டு முகப்பு பத்தியில்கோலத்திற்கு முன்பாக அவர்களை நிற்கச்செய்து பெண்ணின் அப்பத்தாள் குத்துவிளக்கு வைத்தபின் தாய்மாமன் வீட்டு ஆண்கள் தலையில் புழுங்கலரிசி படி 2. தேங்காய் 2, கத்திரிக்காய் 2, கொண்ட வேவு கடகாத்தைத் தலையில் வைத்துக்கொள்ள, முதலில் பெண்ணும், பிறகு அவள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் ஒவ்வொருவராக வந்து 5, 7, 9, என்ற ஒற்றைப்படை எண்ணிக்கையில் இறக்கி நடு வீட்டில் கொண்டுபோய் வைத்துவிட வேண்டும்.

மாப்பிள்ளை தலைப்பிள்ளையாக இருந்தால் மாப்பிள்ளையின் ஆயாள் வீட்டாரும் இந்த வேவு எடுத்தல் வேண்டும். ஆயாள் வீட்டு ஆண்கள் தலையில் இருந்து மாப்பிள்ளை வீட்டு பெண்கள் இறக்கிவைக்க வேண்டும்.

பிறகு பெண் வீட்டார் கல்யாண வேவு எடுத்தல் வேண்டும். கல்யாண வேவின்போது பெண் வீட்டு ஆண்களான பெண்ணின் தந்தை, பெண்ணின் பெரியப்பா, சிற்றப்பா, பெண்ணின் அண்ணன், தம்பிகள், பெண்ணின் அண்ணன் தம்பி மகன்கள், பெண்ணின் அய்யாக்கள், வீட்டுப்பங்காளிகள், கூடிக்கிற பங்காளிகள், பெரும் பங்காளிகள் ஆகியோர் தலையில் வேவு கடாகத்தை வைத்துக்கொள்ள; மாப்பிள்ளை வீட்டுப் பெண்களான கல்யாணப்பெண், மாப்பிள்ளையின் தாயார், மாப்பிள்ளையின் ஆச்சி, தங்கைமார், மாப்பிள்ளையின் ஆச்சி, தங்கச்சி மக்கள், மாப்பிள்ளையின் பெரியப்பச்சி சித்தப்பா மகள்கள் இறக்கி இருவருமாக நடுவீட்டிற்குள் கொண்டுபோய் வைத்தல் வேண்டும்.

31. பணம் எழுதுதல் ;

திருப்பூட்டி முடிந்ததும், நேரத்தை அனுசரித்து மாப்பிள்ளை வீட்டு பங்காளிகளும், பெண் வீட்டுப் பங்காளிகளும் தனித்தனியாக இருந்து பணம் எழுத வேண்டியது. ஒரு முக்காலியில் சருவச்சட்டி வைத்து அதில் பச்சைப்பாலை ஊற்றி வெற்றிலையை கிள்ளிப்போட்டு அதில் ஒரு ரூபாய் நாணயத்தையும் போட்டதன் பின் பணம் எழுத வேண்டும்.

முதலில் அந்த வகை ஆட்கள், அப்புறம் பங்காளிகள் பிறகு உறவினர்களகவும், பங்காளிகளாகவும் உள்ளவர்கள், பின்பு மாமக்காரர்களையும் எழுதிப் பின்பு சடங்குக்காரர்கள், சம்மந்தப்புரங்களையும், உறவினர், நண்பர்களையும் எழுதி ஒன்றாகப் பணத்தைச் சிகப்புத் துணியில் முடிந்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதிய பணத்தை, மொய் பண ஏடு, வெற்றிலை, பாக்கு, மலர், எலுமிச்சம் பழம் உள்ள தாம்பாளத்தில் எடுத்து வைத்து மாப்பிள்ளை, பெரியவர்கள் மாமக்காரர்கள் ஆகியோரிடம் கொடுத்து வணங்கி வாங்கிப் பின்னர், இளையவன் ஒருவன் மாப்பிள்ளையை வணங்க, இருவரும் சேர்ந்து அந்த மொய்ப்பண முடிச்சு உள்ள தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் வைத்து பிறகு எடுத்துக்கொண்டு வந்து கணக்கில் வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

இதே போல் பெண் வீட்டுக்காரர் எழுதிய மொய்ப் பண ஏட்டையும் தாம்பாளத்தில் வைத்து பெண்ணின் தகப்பனார் அல்லது பெண்ணின் அண்ணன், தம்பி மாமக்காரர்களிடம் கொடுத்து வாங்கி தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் வைத்துப் பிறகு எடுத்து வந்து கணக்கில் வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

32. கும்பிட்டு கட்டிக் கொள்ளுதல் ;

மணவறை முடித்து நெற்கோட்டையை தாண்டி வீட்டிற்குள் சென்று வந்ததும், நடு வாசலில் மணமக்கள் இருவரும் வந்து, ஆளுக்கொரு நாற்காலியில் அமர வேண்டும். மாப்பிள்ளை, பெண் இரு வீட்டுப் பெற்றவர்களும், பெரியவர்களும் வந்து நின்றவுடன் மாப்பிள்ளை, பெண் இருவரும் தனித்தனியே விழுந்து கும்பிட்டபின் இவர்களுக்கு நல்லாசி வழங்கி வர வேண்டியது

33. சீராட்டுக் கொடுத்தல் (பாக்குச் சுருள்) :-

சீராட்டுக்காக அவரவர் வழக்கப்படி ஒரு தொகையை பெண்ணின் தந்தை கொடுத்து, அதை வள்ளுவப்பையில் வைத்துப் பிறகுஎடுத்து ஸ்ரீதனப் பணத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

34. மஞ்சள் நீராடுதல் :-

மணமக்கள் இருவரும் நல்ல உடைகளை களைந்துவிட்டு, வேறு சாதாரண உடைகளை அணிந்துகொண்டு நடு வாசலில் ஒரு பெஞ்சின் மீது அமர வேண்டும். உள்ளூர் கோவில் வயிராவி மாப்பிள்ளைக்கு எண்ணை தொட்டுவைப்பார். பிறகு வயிராவி, கரைத்து வைத்திருக்கும் மஞ்சள் நீரை மாப்பிள்ளை, பெண் பாதங்களில் ஊற்றுவார். அப்போது மாப்பிள்ளை பெண் தந்தையார் இருவரும், தங்களது ஆடை நுனிகளை மஞ்சள் நீரில் நனைத்துக் கொள்ளல் வேண்டும். இதுபோல மாப்பிள்ளை பெண்ணின் தாயார் இருவரும் மஞ்சள் நீரில் தங்களது சேலை நுனிகளை நனைத்துக் கொள்ளல் வேண்டும். பிறகு மணமக்கள் நாணாலைக்குரிய புதிய ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டும்.

35. காப்பு கழற்றிக் கால் மோதிரம் அணிதல் :-
(நாணாளைச் சடங்கு)

பெண்ணை மணைமேல் நிற்க வைத்து மாப்பிள்ளையின் தாயார் பெண்ணுக்கு தன் கையில் அணிந்துள்ள, காப்பை கழற்றி அணிவித்து பெண்ணின் (இரண்டாவது) கால் விரல்களில் மிஞ்சி (கால் மோதிரம்) அணிவிக்கவேண்டும். பிறகு திருப்பூட்டிய பிறகு செய்துகொள்ளும் சடங்கைப் போல் மாப்பிள்ளையின் தாயார் சடங்கு செய்துகொள்ள வேண்டும்.

36. காப்பு அவிழ்த்தல் :-

மாப்பிள்ளை பெண் இருவருக்கும் அவரவர் மாமக்காரர்கள், இருவர் கையிலுள்ள ஐயரால் முடியப்பட்ட காப்பு இரண்டையும், தனித்தனியாக அந்தந்த மாமக்காரர் அவிழ்த்து ஒரு தாம்பாளத்தில் வைத்துவிட வேண்டும்.

37. பிள்ளை எடுக்கிக் கொடுத்தல் :-

சடங்குக் குழவியைச் சிகப்புத் துணியில் வைத்து அதை பேரனாகவே கருதி பெண்ணின் தந்தை எடுக்கிக் கொடுக்க பெண் நமஸ்காரம் செய்து வாங்கிக் கொள்ளவும். இதுபோல் பெண் வீட்டு ஆண்களில் முக்கியமானவர்கள் எல்லோரும் பிள்ளை எடுக்கிக் கொடுத்து அசீர்வாதம் செய்ய வேண்டியது.

38. அரசாணிக்கு பொங்கல் இடுவது :-

பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக் காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்க வேண்டியது. பிறகு அதை வண்ணாத்தியிடம் கொடுக்க வேண்டும்.

39. பெண் சொல்லிக்கொள்வது :-

பெண் தாய் வீட்டிலிருந்து கணவன் வீட்டிற்குச் செல்ல இருப்பதால் தன் தாயிடமும், தாயர்திகளிடமும் சொல்லிக்கொள்ள வேணும். பெண் நடுவீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திருக்கும் பாய் ஒன்றில் கிழக்கு முகமாக கையில் வெற்றிலை, பாக்கு தாம்பாளத்துடன் நிற்க வேண்டும். பெண்ணின் பெற்றோர், உறவினர் பங்காளிகள் ஒவ்வொருவராக வந்து அந்தப் பாயின் மீது எதிரில் நிற்க, அவர்களிடம் வெற்றிலை, பாக்கு தாம்பாளத்தைக் கொடுத்து அவர்கள் காலில் விழுந்து வணங்கி, சென்று வருகிறேன் என்று சொல்லி, வாங்கிக் கொள்ள வேண்டும்.

40. குடி அழைப்பு :-

பெண் சொல்லிக்கொண்டதும் மணமக்கள் இருவரும் நடுவீட்டில் உட்கார்ந்து இருந்து எழுந்து வந்து முகப்பு நடுப் பத்தியில் கோலத்திற்கு முன் வந்து நிற்பார்கள். பெண்ணுக்கு ஆயாள் வந்து சிலேட் விளக்கு வைத்து, அழகு ஆலாத்தி எடுத்து விபூதி பூசி கட்டுச்சோறுடன் வழியனுப்பி வைப்பார்கள். மாப்பிள்ளைக்கு வலது பக்கம் நிற்கும்படியாக பெண் அழைத்துச் செல்ல வேண்டியது. இதுசமயம் பெண்ணின் தாயார் பால் பானை கையில் கொண்டு வர வேண்டும்.

மாப்பிளையின் ஊருக்கு செல்லும் வழியில் ஒரு ஊரணிக்கரையில் இறங்கி கட்டுச்சோறு சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளை வீட்டு பங்காளி ஒருவரது வீட்டில் தங்கியிருக்க வேண்டும்.

41. அரசாணிக்கால் அவிழ்த்தல் :-

பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக்காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்கியதும் பெண் வீட்டு பங்காளிகள் அல்லது பெண்ணின் சகோதரர்களே சரவிளக்கை மலையேற்றி விட்டு, சரவிளக்கை எடுத்துவைத்துவிட்டு அரசாணிக்காலில் உள்ள அரச இலை, மா இலை, கிளுவை கம்பு உட்பட யாவற்றையும் அவிழ்த்துவிட வேண்டியது. பின் பங்காளி வீட்டு பையன்களில் ஒருவரை அழைத்து முளைப்பாரியை சர்வ சட்டியில் வைத்து சிகப்பு தோம்புத் துணி கொண்டு மூடி ஊரணியில் அல்லது கிணற்றில் சங்கு ஊதிக்கொண்டுபோய் விட்டுவர வேண்டியது. கிளுவை, பாலைக்கம்புகளை வீட்டுத் தோட்டத்தில் ஊன்றிவைக்க வேண்டியது. பவளம், காசு இரண்டையும் எடுத்து விடவும்.

திருமணத்தன்று மாப்பிள்ளை வீட்டில் :

42. மாப்பிள்ளை வீட்டில் பெண் அழைப்பு :-

பெண் வீட்டில் இருந்து திருமணம் முடிந்து விடைபெற்று வந்த மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள், மாப்பிள்ளை வீட்டு வளவு வாசலில் கோலமிட்டு பெண் அழைத்த, பொங்கல் இட்டு, அடுப்பை அகற்றி விடலாம். பெண்ணை அழைத்து வரும் சமயம் மூன்று இலையில் சாதம் படைத்து ஒரு இலைக்கு 4 வாழைப்பழம், பருப்பு, நெய் ஊற்றி படையல் செய்து படைத்த இலைகளுக்கு முன் மூன்று தவலைகளில் தண்ணீர் வைத்து ஒன்றில் குலம் வாழும் பிள்ளையையும், மற்றொன்றில் எழுத்தாணியையும் போட வேணும். பெண், மாப்பிள்ளை இருவரும் திருமணம் முடிந்து வந்து தங்கி இருக்கும் இடத்திலிருந்து எல்லோரும் மேளவாத்தியங் களுடன் மணமக்களை ஊர்வலமாக மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்துவர வேண்டும். வீட்டிற்குள் நுழையும்பொழுது முதலில்

வலது காலை எடுத்துவைத்து நுழையும்படி முன்னதாகவே சொல்லிவைத்து அதன்படி மணமக்கள் செய்தல் வேண்டும். பெண்ணின் கையில் ஒரு சட்டியில் தேங்காய்,வெற்றிலை, பாக்கு, வைத்துக் கொடுத்து கொண்டு வரச் செய்யவும்.

பெண்ணும், மாப்பிள்ளையும் வீட்டிற்கு வந்ததும் முகப்பு நடுப்பத்தியில் கோலத்திற்கு முன்பாக நிறுத்தி மாப்பிள்ளையின் அப்பத்தாள் அழகு ஆலத்தியும், பிள்ளையார் ஆலத்தியும் எடுத்து விபூதி பூசி உள்ளே வந்ததும் படைத்த இலைக்கு முன்பாக கிழக்கு முகமாக நிற்கும்படி இரு தடுக்கை போட்டு ஒன்றில் சடங்கு செய்து கொள்பவர்களும், மற்றொன்றில் பெண்ணும் நிற்க வேண்டும். இவர்களுக்கு அருகில் மாப்பிள்ளை நிற்க வேண்டும்.

குறிப்பாக பெண்ணானவள் பெண் அழைத்துக்கொண்டு உள்ளே வரும்பொழுது எந்த திசை நோக்கி உள்ளே வருகிறார்களோ அத்திசையைப் பார்த்தவாறே முதல் சடங்கு செய்துகொள்ள வேணும். அப்போது திருப்பூட்டு சடங்கில் செய்த மாதிரி யாவற்றையும் செய்ய வேணும். அதுமுடிந்ததும் மற்ற மூன்று திசைகளிலும் சடங்கு செய்துகொள்ள வேணும். முதல் சடங்கைத் தவிர அடுத்தடுத்து உள்ள சடங்குகள், சிலேட்டு விளக்கை இடது கையிலும், கெண்டிச் செம்பை வலது கையில் வைத்து செய்துகொண்டால் போதும். எல்லா சடங்கிலும் பெண் கையில் இரண்டு வெற்றிலை இருக்க வேணும், நான்கு திசையிலும் சடங்கு செய்து வந்தால் ஒரு சுற்று முடிந்துவிடும். பின்னர் இரண்டாவது சுற்றை சும்மா சுற்றி வர வேண்டும். மூன்று சுற்றுக்கும் இரண்டு மாமக்காரர்களும் உடன் நிற்க வேண்டும். மூன்றாவது சுற்று வரும்போது ஒன்றன் பின் ஒன்றாக மணமக்கள் இருவரும் இணைந்து மூன்று தவலைகளுக்குள்ளும் கையை விட்டுப்பார்த்து குலம் வாழும் பிள்ளையை மாப்பிள்ளை எடுத்து பெண்ணின் கையில் கொடுத்துவிட்டு எழுத்தாணியை தன் கையில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் குலம் வாழும் பிள்ளையை பெண் பத்திரமாக இடுப்பில் சொருகிக்கொண்டு நடுவீட்டில் போய் இருவரும் உட்கார்ந்து வெளியே வர வேண்டும்.

43. மாப்பிள்ளை பெண் பால் பழம் சாப்பிடுவது :-

பெண் அழைத்து முடித்தவுடன் வளவில் உள்ள மற்றவர்கள் பால் பழம் தருவார்கள். அத்துடன் பாக்குப் பணம் 1 அல்லது 2 வைப்பார்கள். அதை முதலில் மாப்பிள்ளை சாப்பிட்டுவிட்டு பணத்தை எடுத்துக்கொள்ள வேணும். பின்னர் பெண் எடுத்துக் கொள்ள வேணும்.

44. பெண் வீட்டார் எடுக்கும் பச்சரிசி வேவு :-

மாப்பிள்ளை பெண், பால், பழம் சாப்பிட்டதும் மாப்பிள்ளை வீட்டில், பெண் வீட்டார் எடுக்க வேண்டிய வேவு இது. வேவுக் கடகத்தில் பச்சரிசி பெ. படி. 1, தேங்காய் 2, கத்திரிக்காய் போட்டு இருக்க வேணும். பெண் வீட்டைச் சேர்ந்த ஆண்கள் தலையில், இந்த வேவை வைத்து, மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பெண்கள் இறக்குதல் வேண்டும். குறிப்பாக பெண்ணின் தகப்பனார் தலையில் இருந்து, பெண், வேவு இறக்கவேண்டும்.

45. மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் நெல் வேவு :-

வேவுக் கடகத்தில் நெல் பெ. படி 1, தேங்காய் 2, கத்திரிக்காய் 2 வைத்து மாப்பிள்ளையின் தகப்பனார், தலைப் பாகை கட்டி நெல் கடகத்தைத் தலையில் வைத்திருக்கவேணும். இந்த வேவை பெண் வந்து இறக்குதல் வேண்டும்.

46. ஸ்ரீ தன உண்டியல் :-

ஸ்ரீதனம் தலைச் சேலையில் முடிந்தது பாக்குச் சுருளில் வைத்தது ஈடுபொன் தந்தது ஆகிய நான்கு தொகைகளையும் குறிப்பிட்டு உண்டியல் எழுதி அந்த உண்டியலையும், அதற்குண்டான ரொக்கம் அல்லது ட்ராப்டையும் ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம்பழம், புஷ்பம் வைத்து மணமக்களின் தந்தையார், பெரியவர்கள், மாமக்காரர் முதலியவர்களிடம் மாப்பிள்ளை கொடுத்து வணங்கிப் பெற்றுக்கொண்டு, முடிவில் ஒரு சிறு பையனும், மாப்பிள்ளையுமாகச் சேர்ந்து அத் தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் கொண்டுபோய் வைத்து எடுத்து வர வேணும்.

பின்னர் பெண் வீட்டார் பாக்கு, வெற்றிலை வாங்கி சொல்லிக்கொண்டு, புறப்படவேண்டியது.

47. நீர்ச்சோறு இடுவது :-

திருமணம் முடிந்த அன்று இரவோ அல்லது மறு நாளிலோ, பெண் வீட்டார். மாப்பிள்ளை பெண்ணைக் கூட்டிக்கொண்டு சென்று மாப்பிள்ளைக்கு கஞ்சி. பணியாரம். வள்ளிக்கிழங்கு பொரித்து உள்விட்டில் இலை போட்டு பெண் பரிமாறி தயிர் ஊற்ற வேண்டியது. அப்போதே நடு வீட்டினுள் பெண்ணை உட்கார வைத்து பெண்ணின் அயித்தை பெண்ணின் கழுத்தில் தும்பை கட்டிவிட வேண்டியது அயித்தை அல்லது அயித்தை மகள் அப்பச்சி. பெரியப்பச்சி வகையராவும் தும்பைக் கட்டலாம்.

48. மூன்று வேவு அல்லது வழிகள் :-

திருமணம் முடிந்தவுடன் மூன்று முறை பெண் வீட்டார், மாப்பிள்ளை பெண்ணைத் தன் வீட்டிற்குக் கூட்டிவரவேணும் அதில் நீர்சோறு இடுவது முதல் வழியாகவும் மற்ற இரண்டு வழிகளும் ஒரே தடவையில் வந்து வரலாம். இந்த முறையுடன் திருமண முறைகள் யாவும் பூர்த்தியடைகிறது. செட்டிநாட்டுக் கல்யாணம் சீரும் சிறப்புடன் நிறைவேறுகிறது.

49. காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல் :-

ஒரு குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நிறைவெய்தியதை முன்னிட்டு இருகுடும்பத்தாரையும் பாராட்டி அவர்களுடைய உறவினர்கள் (தாய் வழி மாமன்) கொடுக்கின்ற விருந்து இது. புதுமணமக்கள் தாய்மாமன் வீடுகளுக்குச் சென்று காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல் என்பது தொன்று தொட்டு நிலவிவரும் நமது வழக்கம்.

சுபம்! வாழ்க வளமுடன் !!

பெண் வீட்டார் திருமணத்திற்கு முன் கூட்டியே தயாரித்து வைக்கவேண்டிய சாமான்கள் :

1. விரளி மஞ்சள் 100 கிராம்
2. மஞ்சள் தூள் 100 கிராம்
3. சந்தனம் 100 கிராம்
4. நிலைவிளக்கு
5. அரசாணி மேடை
6. அரசாணி அடுப்பு
7. அரசாணிக்கால் கட்ட மூங்கில் கம்பு
8. பாலைக்குச்சி
9. கிளுவைக்கம்பு
10. பவளம் அல்லது சிகப்பு
11. வெள்ளிக்காசு 25 பைசா
12. மாவிலை
13. அரச இலை
14. முளைப்பாரி கிண்ணம் 5
15. சிலேட்டு விளக்கு 1
16. பெரிய தாம்பாளம் 1
17. முக்காலி 2
18. சருவச்சட்டி 2
19. செம்பு
20. கெண்டிச் செம்பு
21. சடங்குத்தட்டு 7 கிண்ணங்களுடன்
22. படி
23. குழவி பட்டுடன்
24. கத்தரிக்காய்
25. நவதானியம்
26. வேவுக் கடகம் 2
27. ஏட்டு ஓலை
28. பச்சரிசி
29. மாமப்பட்டு
30. சங்கு
31. ஆலத்தி பிளேட்
32. விபூதி பிளேட்
33. இசைவுபிடிமான ஏடு 1
34. மொய்ப் பண ஏடு 1
35. தடுக்கு 2
36. பர்மா பாய் 1
37. மனை
38. மனை விரிப்பு 1
39. காப்புக்கட்டும் சிகப்புத் துணி 2
40. சரவிளக்கு
41. செங்கல் 5
42. பச்சை நெல் உமி
43. கொச்சைக்கயறு முடி 5
44. தேங்காய்
45. வாழைப்பழம்
46. கோலக் கூட்டு
47. மலர்மாலை
48. அரசஞ்சமித்து
49. ஆட்டுப் புழுக்கை
50. மணல் 1 தட்டு

மாப்பிள்ளை வீட்டார் திருமணத்திற்கு முன் கூட்டியே தயாரித்து வைக்கவேண்டிய சாமான்கள் :

1. விரளி மஞ்சள் 100 கிராம்
2. மஞ்சள் தூள் 100 கிராம்
3. சந்தனம் டி.எஸ்.ஆர்.
4. சிங்கார் குங்குமம்
5. கற்கண்டு
6. பட்டணம் மஞ்சள்
7. நிலைவிளக்கு
8. சிலேட் விளக்கு
9. பெரிய தாம்பாளம்
10. சட்டி செம்பு
11. கெண்டிச் செம்பு
12. சடங்குத் தட்டு செட்
13. படி
14. குழவி பட்டுடன்

15. கத்தரிக்காய்
16. முளைப்பாரி நெல் பெ.படி 1
17. நவதானியம்
18. வேவுக்கடகம் 2
19. ஏட்டு ஓலை
20. மாமப்பட்டு
12. சங்கு
22. ஆலத்தி பிளேட்
23. விபூதி பிளேட்
24. கோட்டைகட்ட நெல்பெ படி 2
25. வைக்கோல்
26. துணிப் பை 1
27. வள்ளுவப் பை
28. குலம் வாழும் பிள்ளை
29. பாக்குச் சுருள்
30. இசைவுபிடிமான ஏடு 1
31. மொய்பண ஏடு 1
32. தடுக்கு 2
33. பர்மா பாய் 1
34. கோலக் கூட்டு
35. டர்பன்
36. சால்வை
37. டாலர்
38. எழுத்தாணி
39. கண் மார்க் நூல்கண்டு-1
40. திருப்பூட்டுகிற மாலை 2
41. மாப்பிள்ளை மிஞ்சி 2

பூரம் கழிக்க தேவையானவை :
(பெண் வீட்டில்)

அரைத்த மஞ்சள்
சந்தனம்
புஷ்பம் 2 முழம்
பசும்பால் 1 டம்ளரில்
வாழைப்பழம் 6
வெற்றிலை 11
நெல் படி 1
பச்சரிசி படி 1
உப்பு படி 1
இலை அடுக்கு 1
கத்திரிக்காய் 5
தேங்காய் 2
பாக்கு 7
செம்பு
முக்காலி
சருவச்சட்டி
சத்தகம்
மாவிலை
வேப்பிலைக்கொத்து
மேரி ரொட்டிக்கட்டு
தடுக்கு 2

காப்புக் கட்டுச் சாமான் :
(மாப்பிள்ளை, பெண் இருவருக்கும் காப்பு கட்டுவதற்கு இதுபோல் 2 செட் பெண் வீட்டார் எடுத்துவைக்க வேண்டும்.)

அரைத்த மஞ்சள்
முளைமுறியாத மஞ்சள்
நூல் கண்டு
கரைத் துணி
தேங்காய் 2
வாழைப்பழம் 10
இலை அடுக்கு 1
வெற்றிலை பாக்கு
சந்தனம்
கதம்பம்
மாங்கொத்து
நெல் படி 1
பச்சரிசி படி 1
பால் உழக்கு
நெய்
சாந்து சட்டியில் மணல்

உமி, சமித்து,
சூடன்
முக்காலி 2
சருவச்சட்டி 2
தாம்பாளம் 2
முளைப்பாரிகிண்ணம்
முளை திரவியம்
சிகப்பு ப் பட்டு
செம்பில் நீர்
25 பைசா

மணவரை சாமான்கள் :

அரைத்த மஞ்சள்
தேங்காய் 3
வாழைப்பழம் 10
நெய்
சூடன்
முளைத் திரவியம்
இலை அடுக்கு 1
வெற்றிலை பாக்கு
சந்தனம்
கதம்ப புஷ்பம்
நெல் படி 1
பச்சரிசி படி 1
கிண்ணத்தில்
நல்லெண்ணை
பால்
கொண்டை மாலை 2
சிகப்பு ப் பட்டு
செம்பில் நீர்
மாப்பிள்ளைக்கு சாப்பாடு
நூல் கண்டு
அரசஞ்சமித்து

அரசாணிக்கால் கட்டுவதற்கு வேண்டிய சாமான்கள் :

சிறு பவளம் அல்லது
சிகப்பு
25 பைசா காசு 1
கிளுவைக் கம்பு 1
பாலைக்குச்சி 1
மா இலைக்கொத்து
அரச இலைக்கொத்து
அரசாணி மேடை
அரசாணி அடுப்பு
முளைப்பாரி கிண்ணம் 5
ஆட்டாம் புழுக்கை,
சர விளக்கு 1
கொச்சைக் கயிறு முடி 2

மாப்பிள்ளை வீட்டார்

திருப்பூட்டு தாம்பாளத்தில் எடுத்துவைக்க வேண்டிய சாமான்கள்

1. விரளி மஞ்சள் 2
2. எலுமிச்சம்பழம் 2
3. வெற்றிலைப்பாக்கு
4. மல்லிகைப் பூ 4 முழம்
5. விபூதி சிறிய பிளாஸ்டிக் டப்பியில்
6. குங்குமம் சிறிய பிளாஸ்டிக் டப்பியில்
7. வெற்றிலையில் அரைத்த மஞ்சள்
8. சந்தனம் சிறிய பிளாஸ்டிக் டப்பியில்
9. கழுத்திரு திருமாங்கல்யம்
10. பெரிய தாலி சோடிப்பு
11. சிறு தாலி சோடிப்பு

12. கோவில் மாலை
13. திருப்பூட்டு பெரிய யானைக்கண் மாலை
14. பெண்ணிற்கு கொடுக்கும் திருப்பூட்டும் மாலை
15. மேற்படிக்கான ப்ளவுஸ், சேலை
16. குலதேவதையின் விபூதி பிரசாதம்
17. மிட்டாய் 2

பெண் வீட்டார் மாப்பிள்ளை அழைக்க எடுத்து செல்லும் தாம்பாளத்தில் வைக்க வேண்டிய சாமான்கள்

1. விரளி மஞ்சள் 2
2. எலுமிச்சம்பழம் 1
3. வெற்றிலை, பாக்கு
4. விபூதி
5. குங்குமம்
6. சந்தனம்
7. பெரிய பூமாலை
8. கெண்டை வேஷ்டி துண்டு
9. தங்க மைனர் செயின்
10. மோதிரம்
11. கை கடிகாரம்
12. பூச் செண்டு

இரு வீட்டாரும் சர்வச் சட்டியில் எடுத்துவைக்க வேண்டிய சாமான்கள் விபரம்

1. மட்டை உரித்து மஞ்சள் தடவிய தேங்காய் 2
2. வெற்றிலைப்பாக்கு
3. விரளி மஞ்சள் 2
4. வெள்ளி சர்வ சட்டி

மூல மந்திரம்

ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா

புருஷோத்தம பரமாத்மா

ஸ்ரீபகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ...

(இந்த மூலமந்திரம் அதிக சக்தி வாய்ந்தது. உன்னத நிலையை நம் மனதிற்கு அளிக்க வல்லது.)

தினசரி பாராயணம் செய்தால் சகல ஐஸ்வர்யங்களும் பெறலாம்.

உ
சிவமயம்

இசைவுப் பிடிமானம் :-

..........................வருடம்...மாதம்...................தேதி கோயில்..(பிரிவு)....................தந்தை பெயர்..செட்டி (பெயர் ஓகாரத்துடன்...கோவில்........................ ....தந்தை பெயர்..செட்டி பெயர் ஓகாரத்துடன்...

இவர் மகன் ....க்கு இவர் மகள்..ஐப் பாணிக்கிரஹணம் பண்ணிக்கொண்டமைக்கு இவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது ஆறு கல்லெடை பொன் பதின்முக்கழஞ்சு, இவர் சீதனம் கொடுக்கும் பொன் இம்மாறு இவ்வெடை பொன் ஆறு கழஞ்சு, வெள்ளி ஆறு கழஞ்சு, வெண்கலத் தராட்பலம் அறுபத்தொன்று வெள்ளாட்டிக்குப் பணம் முப்பது, சீராட்டுச் சக்கரம் அறுபத்தொன்று இவ்வகைப்படி செய்வோம். இவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது மோதிரம் விராகனிடை மூன்று இவர் உகந்துடையாய்க் கொடுக்கும் பொன் ஏழு கழஞ்சு - இவ் வகைப்படி செய்வோம். இநத நாள் இவரிடும் பொன் இவர் சொல்படி தெரிசனை பதில் முக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம். இந்த இசைவு பிடிமானம் எழுதினேன். ....கோவில் ....பிரிவு தந்தை பெயர்....................................... செட்டி எழுதியவர் பெயர்...செட்டி.

கையெழுத்து...

கையெழுத்து...

பின் குறிப்பு:

பொன் ஒன்பது	-	ஒன்பது மாற்றுள்ள பொன்
கழஞ்சு	-	1/6 அவுன்ஸ்
இம்மாறு	-	இவ்விதம்
தராப்பலம்	-	செம்பு-ஈயம் 8-5 உலோகம்
வெள்ளாட்டி	-	வேலைக்காரி

உ
சிவமயம்

திருமண நடைமுறைச் சடங்குகளின் சுருக்கம்
பெண் வீட்டார் செய்பவை :-

1. கல்யாணம் பேசி முறைச் சிட்டை எழுதிக்கொள்ளல்
2. நிச்சயதார்த்தம்
3. முகூர்த்தத்திற்கு நாள் குறித்தல்
4. முகூர்த்தக்கால் ஊன்றுதல்
5. சுவாமிகளுக்கு பணம் முடிதல்
6. கல்யாணம் சொல்லுதல்
7. திருமணக் கொட்டகை அலங்கரித்தல்
8. கோவிலுக்குப் பாக்கு வைத்தல்

கல்யாணத்திற்கு முதல் நாள்:

9. கூடி ஆக்கி உண்ணுதல்
10. நடுவீட்டில் விளக்கு ஏற்றுதல்
11. கொழு மேளம் வாசிக்கச் செய்தல்
12. மனை போடுதல்
13. கோவில் மாலைகளை வாங்குதல்
14. வளவு வீட்டில் தும்பு பிடித்து கோலமிடுதல்
15. முகப்பு வளவு பத்தியில் கோலமிடுதல்
16. அரசாணைக்கால் கட்டுகிற இடத்தில் கோலமிடுதல்
17. மாற்றுக் கட்டுதல்
18. அரசாணைக்கால் கட்டுதல்
19. பங்காளியைக் கொண்டு இசைவு பிடிமானம்,மொய்ப் பண ஏடு தயாரித்தல்
20. கழுத்துரு மாப்பிள்ளை வீட்டார் வாங்க வருகிறவர்களுக்குத் தயாராகஇருத்தல்
21. மாப்பிள்ளை அழைப்புக்குரிய பொருள்களைத் தாம்பாளத்தில் எடுத்துவைத்தல்
22. சர்வச் சட்டியில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, மஞ்சள்
23. சிலேட் விளக்குகளுக்கு மெழுகு திரி போட்டு வைத்தல்
24. சர விளக்கு தயார் செய்தல்
25. பூரம் கழித்தல், காப்பு கட்டுதல், பகவத்யானம் மணவரைச் சடங்குகளுக்குரிய பொருள்களை எடுத்து வைத்தல்

கல்யாணத்தன்று:

26. பெண்ணுக்கு பூரம் கழித்தல்
27. கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல்
28. மாப்பிள்ளை அழைக்கும் இடத்திற்கு வேண்டியதைச் செய்தல்
29. மாப்பிள்ளை சுவாமி தெரிசனத்திற்கு ஏற்பாடு செய்தல்
30. மாப்பிள்ளைக்கும், கூட இருப்பவர்களுக்கும் பலகாரம் அனுப்புதல்
31. மாப்பிள்ளை அழைப்பு
32. (உள்ளூராக இருந்தால்) மாப்பிள்ளை அறிதல்
33. முகப்புப் பத்தியில் விளக்கு வைத்து ஆலாத்தி எடுத்தல்
34. பெண்ணுக்கு பகவத்யானம் காப்புக் கட்டுதல்
35. மாப்பிள்ளைக்கு பகவத்யானம் காப்புக் கட்டுதல்
36. திருப்பூட்டுத் தாம்பாளத்தை வைத்து மாங்கல்ய பூஜை செய்து உள்வீட்டில் வைத்தல்
37. திருப்பூட்டுத் தாம்பாளத்தைப் பெண்ணின் மாமக்காரர் எடுத்து வந்து வந்திருப்பவர்களிடம் ஆசீர்வாதம் வாங்குதல்
38. திருப்பூட்டுதல்
39. வந்திருப்போருக்கு மிட்டாய், ரொட்டி, குளிர்பானம் வழங்குதல்
40. மாமக்காரர் இருவரும் பெண், மாப்பிள்ளையை முகப்புவரை கூட்டிப் போய் எல்லோருடைய ஆசீர்வாதமும் பெறுதல்
41. இசைவுப் பிடிமானம் எழுதுதல்
42. திருப்பூட்டுச் சடங்கு
43. மணவரைச் சடங்கு
44. வேவு எடுத்தல்
45. பணம் எழுதுதல்
46. கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்
47. சீராட்டுக் கொடுத்தல்
48. மஞ்சள் நீராடுதல்
49. காப்புக் கழற்றி கால் மோதிரம் இடுதல்-நாணாலைச் சடங்கு
50. காப்பு அவிழ்த்தல்
51. பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்
52. அரசாணைக் காலுக்குப் பொங்கலிடுதல்
53. பெண் சொல்லிக்கொள்ளுதல்
54. கட்டுச் சோறு கட்டிக் கொடுத்தல்
55. குடி அழைப்பு
56. அரசாணைக்கால் அவிழ்த்தல்

57. மாப்பிள்ளை வீட்டில் வேவு எடுத்தல்
58. மாப்பிள்ளை வீட்டில் ஸ்ரீதன உண்டியல் எழுதிக் கொடுத்தல்
59. மாப்பிள்ளை பெண்ணுக்கு காய்ச்சி ஊற்றுதல்

மாப்பிள்ளை வீட்டார் செய்பவை :-

1. கல்யாணம் பேசி முறைச் சிட்டைகள் எழுதிக்கொண்டு,நிச்சயதார்த்தம், முகூர்த்தத்திற்கு நாள் நிச்சயித்தல்
2. முகூர்த்தக்கால் ஊன்றுதல்
3. சுவாமிகளுக்கு பணம் முடிதல்
4. கல்யாணம் சொல்லுதல்
5. கோவிலுக்கு பாக்கு வைத்தல்
6. கூடி ஆக்கி உண்ணுதல்
7. நடு வீட்டில் விளக்கு ஏற்றுதல்
8. கொழு மேளம் வாசித்தல்
9. வளவு வீட்டில் தும்பு பிடித்துக் கோலமிடுதல்
10. முகப்பு வளவு பத்தியில் கோலமிடுதல்
11. பெண் அழைப்புக்கு வாசலில் கோலமிடுதல்
12. மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல்
13. பங்காளியைக் கொண்டு இசைவு பிடிமானம், மொய்ப் பண ஏடு தயாரித்தல்
14. பெண் வீட்டிற்குப் போய் கழுத்துரு, சிறு தாலி, ஜோடிப்புகள் வாங்கி வருதலும், சேலை பரப்புதலும்
15. கழுத்துரு கோர்த்தல்
16. முளைப்பாலிகை தயார் செய்தல்
17. கோட்டை நெல் கட்டுதல்
18. வள்ளுவப் பை தயாரித்தல்
19. நடு வீட்டுப் பத்தியில் அரிசி அளத்தல்
20. சர்வச் சட்டியில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, மஞ்சள் 2
21. திருப்பூட்டுவதற்கு கொண்டு செல்ல வேண்டிய தாம்பாளம் தயார் செய்தல்
22. கழுத்துருவுக்கு பொன் கொடுத்தனுப்புதல்
23. மாப்பிள்ளை தன் வீட்டிலிருந்து புறப்படுதல்
24. பெண் வீட்டார் மாப்பிள்ளை அழைக்க வரும்இடத்திற்கு வந்ததும் கோவிலுக்கு சென்று வழிபடுதல்
25. மாப்பிள்ளை அழைப்பு
26. பகவத்யானம், காப்பு கட்டுதல், பூமணம் இடுதல்
27. திருப்பூட்டுதல்

28. இசைவுப் பிடிமானம் கையொப்பமிடல்
29. கல்யாண வேவு எடுத்தல்
30. பணம் எழுதுதல்
31. குடி அழைப்பு
32. பெண் அழைப்பு
33. வளவு, முகப்பு பத்தியில் விளக்கு வைத்து ஆலாத்தி எடுத்தல்
34. பெண் அழைப்புச் சடங்கு
35. வந்திருப்பவர்களுக்கு ரொட்டி, மிட்டாய் வழங்குதல்
36. மாப்பிள்ளை பெண் பால், பழம் சாப்பிடுதல்
37. பெண் வீட்டார் எடுக்கும் வேவு
38. மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் வேவு
39. ஸ்ரீ தன உண்டியல் எழுதி வாங்குதல்
40. பெண் வீட்டிற்கு 3 வழிகளுக்கு போய் வருதல்
41. காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல்

திருமணச் சடங்குகளின் சுருக்கம்

கல்யாணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு:

1. **திருவிளக்கு ஏற்றி :-** சுவாமிகளுக்கு பணம் முடிதல், குலதெய்வ வழிபாடு
2. **முகூர்த்தக்கால் ஊன்றுதல் :-** நடுவாசலில் ஈசானிய மூலையில் (வடகிழக்கு மூலை ஈஸ்வரனுக்குரியது) மூங்கில் கழியின் மீது மஞ்சள் பூசி, குங்குமமிட்டு, முனையில் மாவிலை கட்டி, ஊன்றி, தேங்காய் உடைத்து கற்பூரம் காட்டுவது (கொட்டகை போடுபவர்)
6. **கல்யாணம் சொல்லுதல் :-** பெற்றோர், சகோதரன், சகோதரி, ஆயாள், அத்தை வீடுகளுக்கு
4. **கோவிலுக்கு பாக்கு வைத்தல் :-** பங்காளி ஒருவர், விபரம், அழைப்பு, காணிக்கையுடன் சென்று பதிவு செய்து வைத்தல்.
5. **முளைப்பாலிகை தயாரித்தல் :-** நெல், உளுந்து, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, பயறு, எள் ஆகிய நவதானியங்களை பெரியபடி அளவில் சேர்த்து. ஊரணி நீர் ஊற்றி பானையில் சுமங்கலிகள் ஊறவைத்து. மறுநாள் தண்ணீர் மாற்றி, பிறகு முதல் நாள் இரவு நீரை வடித்து சிகப்புத்துணியில் கட்டி ஓர் சர்வச்சட்டியில் வைத்து மணமகனுடன் கொண்டு செல்லுவது.

   கருத்து : முளையிட்ட தானியங்கள் போல் மணமக்களும், குடும்பமும் முளைவிட்டுப் பல்கிப் பெருகி வாழ வேண்டும் என்பது.

6. **கோட்டை கட்டுதல் :-** ஒரு மரக்கால் நெல்லைப் பையில் கட்டி வைக்கோல் பிரியால் சுற்றிக்கட்டி மணமகனுடன் எடுத்துச் செல்வது. திருப்பூட்டியபின் கோட்டையை மணமக்கள் மணவீட்டு வாசலில் தாண்டிச் செல்வது. (உடல் நலம் அறிய), அதை விநாயகருக்கு கொழுக்கட்டை நைவேத்தியமாக செய்து வழிபடுதல்.
7. **கழுத்துருவுக்குநூல் இழைத்து வைத்தல் :-** பிள்ளைத்தும்புக்கும் சேர்த்து - பங்காளிகள்மூலம்.

<u>கல்யாணத்திற்கு முதல் நாள்:</u>

1. **தும்பு பிடித்துக் கோலமிடுதல் :-** அறையில் வெளிச் சுவர்,உள்வீட்டுச்சுவர், கதவிலும் மங்கலத்தைக் குறிக்க ஏட்டுக்கயிறு கொண்டு, இரு மங்கலப் பெண்கள் ⊠ கோயில் போலக் கோலக் கூட்டால் குறிப்பது.
   கருத்து : அவ்வீடு தெய்வ சாந்தித்தியம் பெறுவதற்காக.
2. **முகப்பு, வளவுப்பத்தி, நடுவீட்டுக்கோலமிடுதல் :-** பங்காளிப் பெண்டிர்.
3. **மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல் :-** (மாமக்காரர் மூலம், பொற்கொல்லரின் துணையடன்) மணவாழ்வில் அவனது பொறுப்புகளை உணர்த்தி சுட்டிக் காட்டும் கால் கட்டுப்பாடு.
4. **மனை போடுதல் :-** பலபேறுகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கின்ற மங்கலப் பெண்டிர் பலரும் கூடிச் செய்வது,
   கருத்து : அவர்களைப் போல புதுமணமக்களும் எல்லாப் பேறுகளும் பெற்று வாழ வேண்டும் என்பது. (5 செங்கற்கள், வாளியில் குழைத்த செம்மண், மாற்றுத்துணி, மஞ்சள், குங்குமம், புஷ்பம், நீர், மனை, சங்கு.)
5. **அரசாணிக் கட்டுதல் :-** ஒரு. மூங்கில் கழி, கிளுவை மரக்கிளை, பாலைமரக் குச்சி, மாங்கொத்து. அரசங்கொத்து. ஒரு பவளம், பால், அரசாணிமேடை, அடுப்பு, கயிறு, வெள்ளிக்காசு, பங்காளி ஆண்கள்.
   நோக்கம் : "அரசனது ஆணையைக் காட்டும் அடையாளமாக இதனை முன்னிறுத்தி மன்னர் பின்னோராகிய நமது திருமணம் நடத்துகிறோம்". அருகில் சரவிளக்கைதயார்நிலையில் வைத்தல்.
   பவளம் : நமது டண்டைய பவள வியாபாரத்தை நினைவு கொள்ள
   பால் : இனிமைச் சுவையுடன் வாழ்வு தர.
   கிளுவை : எப்பொழுதும் பல கிளைகளை விட்டுப் பெருகி வளரும் (ஆண்இனம்).
   பாலைக் குச்சி : வாடாது பால் சுரந்துகொண்டே இருக்கும் தன்மையது. (பெண் இனம்)

மாவிலை : மங்கலப் பொருள்

அரச இலை : மரங்களில் பெரியது. நீண்டநாள் வாழ்வது.

கருத்து : மணமக்கள் எல்லா மங்கலங்களுடன் நெடுங்காலம் இனிமையுடன், வாரிசுகளுடன்; வாடாமல் வாழவேண்டும் என்பது. அதன் முன்பு 5 முளைப்பாரி கிண்ணங்களில் ஆட்டுப் பிழுக்கை இட்டு வைத்தல். தானியங்கள் வளர்ச்சியடைய உரமிடுதல். திருமண நிகழ்வு தொடங்குமுன் அரசாணி காலுக்கு புரோகிதரால் மரியாதை செய்யப்படுதல்., முடிந்ததும் அரசாணிப் பொங்கலிட்டுப் படைத்தல்.

6. **மாற்றுக் கட்டுதல் :-** மணமேடை மேல் தளத்தில் நீலத்துணியை விதானமாக்கட்டி பல்லி, பூச்சி மணமக்களின் மீது விழுந்து விடாமல் பாதுகாப்பளித்தல். (சலவைத் தொழிலாளி மூலம்)
7. **கழுத்துரு வாங்கி வருதல் :-** 34 உருப்படி. பிள்ளைத்தும்பு, சிறு தாலி,பெரியதாலி,(வள்ளுவப்பையில் வெற்றிலைப் பாக்குடன், எலுமிச்சம்பழம், விரளி மஞ்சள், கொண்டு சென்று வாங்கி வருதல் பங்காளிகள் 2 ஆண்கள்)
8. **மனையில் கோலமிடல் (மங்கல மகளிர்) :-** இசைவுப் பிடிமானம், மொய்ப் பண ஏடு தயாரித்தல், (பங்காளிகள்) சர்வச்சட்டியில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, விரளி மஞ்சள், எடுத்து வைத்தல். (பூரண கும்ப மரியாதை செய்வது போன்றது.) சடங்குத் தட்டில் எடுத்துவைத்தல்,சிலேட்டு விளக்கு, ஆலத்தி பிடித்து வைத்தல்.

<u>திருமணத்தன்று:</u>

1. **பூரம் கழித்தல் :-** மணமகளுக்கு கன்னித் தன்மையை நீக்கி இல்லறத்திற்கு உரியவளாக அவளை மந்திரப் பூர்வமாக ஆக்குதல். காலை 5-00 மணி - பெண்ணின் தாய் அல்லது அத்தை, வேப்பிலை- ஏழு இடம்-தலை,இரு தோள்பட்டை, இடுப்பு, இரு பாதங்கள், இரும்புச் சத்தகத்தால் தட்டி விடுதல், -பெண் சரமாலையுடன் -புரோகிதர் (குருக்கள்) விநாயகர் பூஜை, வர்ண கும்ப பூஜை செய்வார். - கன்னி நீராடுதல்.
2. **மாப்பிள்ளை புறப்படுதல் (குறித்த நேரத்தில்) :-** மணமகனின் அப்பததாள் சிலேட் விளக்கு வைத்து ஆலத்தி எடுத்து விபூதி பூசி, வழி அனுப்புதல்.

   ஒரு சதுர ஆலத்தி வடிவில் - 4 திரிகள்
   ஒரு கூம்பு ஆலத்தி வடிவில் - 1 திரியுடன்
   மணமகனின் தந்தை - தேங்காய் சட்டி எடுத்து செல்லுதல்

தாய் - தாம்பாளத்தில் கோயில் மாலை, சேலை, கழுத்துரு, சிறு தாலி, பெரிய தாலி, விபூதி, குங்குமம்,

சகோதரி - பால் பானை

பணியாட்கள் - முளைப்பாரி, விதைக்கோட்டையையும், 2 சிலேட் விளக்குகள் ஆண்கள் இருவர் எடுத்து வருதல்.

அழைக்கும் இடம் - அர்ச்சனை செய்தல். மாப்பிள்ளையை அழைத்து வந்ததும், பெண்ணின் அப்பத்தாள் அல்லது அத்தை விளக்கு வைத்து ஆலத்தி எடுத்து திருநீர் இட்டு அழைத்துச் செல்லல்.

3. **மாப்பிள்ளைக்கு பகவத்யானம் செய்தல் :-** காப்பு கட்டுதல்.

கருத்து : மண வாழ்வு சிறக்க இறைவனை தியானித்தல் (பவணம்-தன்னை சுத்தி செய்து கொள்ளுதல்) சிகப்புக் கரை கோட்டுத் துணி, வெள்ளிக்காசு, விரளி மஞ்சள்.

மஞ்சள் காப்பு ; ஒரு செயலை முன்னின்று முடிக்க முனைந்து நிற்பது.

4. **பெண்ணுக்கு பகவத்யானம் செய்தல் :-** கணபதி பூஜை (புரோகிதர்)

5. **திருமாங்கல்ய பூஜை :-** புரோகிதர், பஞ்சாங்கக்காரர்

6. **பூமணம் இடுதல் :-** மலர்களை பசும்பாலில் நனைத்து மணமக்கள் உடலில், மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை மூன்று இடங்களையும் தொட்டு வாழ்த்துதல்.

கருத்து : மலர்போல் எப்போதும் மணம் பரப்பி வாழ வேண்டுமென வாழ்த்துதல். முதலில் மாமக்காரர், பிறகு பங்காளிகள்.

7. **அரிமணம் இடுதல் :-** (அரி-நெல்) எடுத்து வணங்கி வளமுடன் வாழ வாழ்த்துதல், முதலில் மாமக்காரர், பிறகு பங்காளிகள்.

8. **திருப்பூட்டுத் தாம்பாளத்தைக்காட்டி பெண்ணின் மாமக்காரர் வந்திருப்பவர்களிடம் ஆசி பெறுதல் :-** (மாமா - மாமி)

9. **திருப்பூட்டுதல் :-**

1. மணமகளை மனையின்மீது கிழக்கு முகமாக நிற்கச்செய்து, கைகளில் பச்சரிசி, தேங்காய் கொடுத்தல்.

கருத்து : தேங்காய்-முக்கண்ணனின் முன்னிலையில், பச்சரிசி-நிலமகள் சாட்சியாக உன்னை மனைவியாக ஏற்று கொள்கிறேன். என ஊறுதி எடுத்தல்.

2. மணமகன் கோயில் விபூதிகளை தான் பூசிக்கொண்டு மணமகளுக்கு பூசி, கோயில் மாலையை அணிவித்தல்.

3. ராசிமிக்க பெரியவர் ஒருவர் எடுத்துத்தரும் கழுத்துருவை பெண்ணின் நெஞ்சுக்குழிக்குக் கணக்காகப் பிடித்து,அணிவித்து மூன்று முடிச்சுப்போடல்.

கருத்து : சிந்தை, உடல், சொல் மூன்றாலும் ஒன்றுபட்டு

வாழ்வோம் என்பது. விழிப்பு, தூக்கம், கனவு ஆகிய மூன்று நிலைகளிலும் நீ என் மனைவி/நான் உன் கணவன் என்பது.

4. சிறு தாலி, பெரியதாலி அணிவித்தல்.

5. முடிச்சுகள் மீதும், தாலிகளிலும், மஞ்சள், குங்குமம் இடல்.

6. பெண்ணின் கையில் உள்ள அரிசி, தேங்காயை தாம்பாளத்தில் வைத்தல்.

7. மணமகன் முதலில் மாலையிட மூன்றுமுறை மாலை மாற்றுதல்.

8. அரசாணியை வலம் வந்து பெரியவர்களிடம் ஆசி பெறுதல்.

10. **இசைவு பிடிமானம் எழுதுதல் :-** மணமக்களின் தந்தையர் இருவரும் நடுவீட்டில்அமர்ந்து கையெழுத்திட்டுமாற்றிக்கொள்ளல். – திருமண பதிவு பத்திரமே இது.

11. **திருப்பூட்டிய சடங்கு :-** பெண்ணின் தாயார், சகோதரி செய்யும் சடங்கு. ஏழு கிண்ணங்கள்-பிள்ளையார், வெற்றிலை, பாக்கு ஒன்றிலும் விபூதி, பச்சரிசி, மஞ்சள், உப்பு, புளி, பஞ்சு மற்ற ஆறு கிண்ணங்களிலும் - 7X3=21 முறை தான் கழுத்தில் பூசிக்கொண்டு, பெண்ணின் கழுத்திலும் பூசுதல் - ஒரு வெற்றிலையைக் கொடுத்து கெண்டியிலிருந்து நீர் விடுதல், பெண் பாதங்களில் வடித்துவிட்டு நெற்றியில் வைத்து வணங்குதல்.

கருத்து : வீட்டிற்கு வரும் மருமகள் தான் தரும் பொருள்களை வைத்து செம்மையாக இல்லற கடமைகளைப்பணிவுடன் ஆற்றவேண்டும் என்பது - வணங்கி பாதபூஜை செய்வது.

12. **கல்யாண வேவு :-** மாம வேவு, வேள்வு-விருப்பம் என்ற சொல்லின் திரிபு.. ஆயாள் வீட்டிலிருந்து மணமகளுக்கு அனைத்துப்பொருட்களையும் தாங்களே விரும்பி தலைச் சுமையாகவே கொண்டு வந்து கொடுப்பதுதான் வேவு, 5. 7, 9, 11 முறை இறக்குதல்.

13. **மணவறைச் சடங்கு :-** புரோகிதர்- விநாயகர் பூஜை, வர்ண கும்ப பூஜை,அக்னி வளர்த்து, நவக்கிரக ஹோமம், ஆயுஷ்ய ஹோமம் செய்த பின் பூமணம், அரிமணம் இடுதல் - மாமக்காரர், பங்காளிகள். மணமக்களுக்கு வாழைப்பழம் தடவுதல். (இனிமையான விளையாட்டுகள் அறிமுகப்படுத்திக் கொள்ளுதல்) எண்ணெ, சீயக்காய், நீர் ஒருவருக்கு ஒருவர் மாவிலையால் தொட்டு வைத்தல், மாப்பிள்ளைக்கு உணவு பரிமாறுதல் (கடமை உணர்வு), கொண்டை மாலை மாற்றிக்கொள்ளல் (உள்ளக்கலப்பு),

(இல்லறக் கடமைகளை உணர்த்தவும், உள்ளக்கலப்பினை ஏற்படுத்தவும்)

தலைச்சீலையில் முடிதல் : பெண்ணின் தந்தை ஒரு சிறு தொகையை வழிச் செலவிற்காக கொடுக்கும் முதல் பணப்பரிசு இது.

தேங்காய்ச் சட்டியை மாமப்பட்டினால் மூடி மூன்று முறை மாற்றிக்கொள்ளல் பெண்ணின் தந்தை மாப்பிள்ளைக்கு மோதிரம் அணிவித்தல். (பாணிக்கிரஹணம்அல்லது தாரை வார்த்துக் கொடுத்தல்.

எழுந்து அரசாணி. அக்கினியை வலம் வந்து, நெல்கோட்டையை தாண்டி நடு வீட்டினுள் அமர்தல்.

14. **மொய்ப்பணம் எழுதுதல் :-** முக்காலி, சட்டி, பால், வெற்றிலை, சங்கு, முதலில் ஐயா, பிறகு பங்காளிகள், உறவினர்கள், மாமக்காரர் பணம் எழுதுதல்.

15. **கும்பிட்டுக் கட்டிக்கொள்ளுதல் :-** ஆசிகள் வழங்குதல்.

16. **சீராட்டுக்கொடுத்தல் :-** பாக்குச் சுருளில் பெண்ணின் தந்தை சகோதரர் தரும் பணத்தை வள்ளுவப் பையில் வைத்துக்கொடுத்தல். (வள்ளுவன் – வரும் பொருள் உரைப்பவன்)

17. **மஞ்சள் நீராடுதல் :-** மணமக்களின் உடற்சூடு தணிய, அலுப்புதீர.

18. **காப்பு கழற்றி கால் மோதிரம் அணிதல் :-** (நாணாளைச் சடங்கு) நான்காம் நாள் சடங்கு. மாப்பிள்ளையின் தாயார் தனது காப்பை கழற்றி பெண்ணுக்கு அணிவித்து, கால் மோதிரம் இட்டு சடங்கு செய்து கொள்ளல். (மாமியார் தன் மருமகளுக்கு நல்ல நாளில் தன் அணிகலன்களையும், உடமைகளையும் கொடுத்து, குடும்ப பொறுப்பினை கொடுத்தல்.)

19. **மாமக்காரர் மஞ்சள் காப்பை அவிழ்த்தல் :-**

20. **பிள்ளை எடுக்கிக் கொடுத்தல் :-** பெரியோர்கள் வாழ்த்து

21. **பெண் சொல்லிக்கொள்ளல் :-** பெரியோர்கள் அனைவரிடமும்.

22. **குடி அழைப்பு :-** நீராலாத்தி பெண்ணுக்கு ஆயாள், கட்டுச் சோறு கட்டிக்கொடுத்து வழி அனுப்புதல்.

23. **அரசாணிக்கால் அவிழ்த்தல் :-** பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக்காலின் முன் பொங்கலிட்டு இறக்கியதும் பங்காளிகள் அவிழ்த்தல், முளைப்பாரி நெல்லை ஊரணியில் விடுதல், கிளுவை பாலைக் கம்புகளை வீட்டுத்தோட்டத்தில் ஊன்றி வளரச் செய்தல், பவளம், வெள்ளிக்காசு இவற்றை எடுத்து பெட்டியடியில் ஒப்படைத்தல்.

24. மாப்பிள்ளை வீட்டில் மணமக்கள் அழைப்பு :- குறித்த நல்ல நேரத்தில் வலது காலை எடுத்துவைத்து வரச் சொல்லல்–ஆலத்தி எடுத்தல்–பொங்கலிட்டுப் படைத்தல்–சடங்கு செய்தல்–மூன்று முறை வலம் வருதல்– எழுத்தாணி (குடும்பத்தலைவன் வரவு செலவு) குலம் வாழும் பிள்ளை எடுத்தல், (தலைவி மகப்பேறு அடையவிருக்கிறாள்).

25. மணமக்கள் பால் பழம் சாப்பிடுதல் :- வளவு வீடுகளில்

26. வேவு எடுத்தல் :- பிள்ளைக் கலயம், நெல், பால் வைத்து – பெண் + மாமனார் முதல் வேவு, பிறகு மற்றவர்கள்.

27. ஸ்ரீதனம் வழங்கி ஆசீர்வதித்தல் :- பெரியவர்கள்

28. நீர்ச் சோறு இடுதல் :- கஞ்சி, பணியாரம், வள்ளிக்கிழங்கை பெண் பரிமாறுதல்–நடு வீட்டில் பிறகு பெண்ணின் அத்தை பெண்ணின் கழுத்தில் பிள்ளைத் தும்பை கட்டி விடுதல்.

29. தாய்மாமன் வீடுகளில் காய்ச்சி ஊற்றிக்கொள்ளுதல்.

–: சுபம் :–

மணி விழா தத்துவம்

மனிதன் பிறக்கும்போது குவா, குவா என்று சொல்லிக் கொண்டே பிறக்கின்றான். (வடமொழியில் க்வா, க்வா என்பது குவா, குவா என்று மருவியது). க்வா என்பதற்கு எங்கே என்பது பொருள். உதரமகன்று புவியில் விழுந்ததும் நற்கருமம் எங்கே? நான் செய்யவேண்டியது என்ன? என்று கேட்டுக் கொண்டே பிறக்கிறான்.

நற்கருமம் செய்பவர்கள் பல நலங்களையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் பலகாலம் வாழ்வர்.

மனிதன் பிறந்த ஓராண்டில் அப்த பூர்த்தி சாந்தியும், 59–ம் வருஷத்தில் உக்ராத சாந்தியும், 60–வது வருஷப் பூர்த்தியில் ஷஷ்டி அப்த பூர்த்தி சாந்தியும், 70 வது வயதில் பீமரத சாந்தியும், எட்டு மாதங்கொண்ட 80–வது வயதில் சதாபிஷேக சாந்தியும், ஆயிரம் பிறை பார்க்கும் போது ஸஹஸ்ரசந்திரதர்சன சாந்தியும், 90–வது வயதில் மகாபிஷேகமும், 100–வது வயதில் சதாபிஷேகமும் விதிமுறைகளோடு செய்து கொண்டால் 120 வயது வரை சௌக்யமாய் வாழ்வார்கள்

எல்லா மனிதர்களுக்கும் 60 ஆண்டு முடிந்து 61 வருஷ தொடக்கத்திலிருந்து காலன், யவனன், யமனன், ஸீமதூம்சன் என்ற நான்கு விதமான துஷ்ட கிரகங்களால் எந்தச் சமயத்திலும் அபமிருத்யுதோஷங்கள் வரக்கூடும் என்றும் அதன் தோஷ நிவர்த்தியாக 60 வருஷத்திற்கும் 60 தேவதைகள் வைத்து பூஜித்து மஹாமிருத்யுஞ் ஜெய ஹோமமும் செய்து கொண்டால் 61 வயதிலிருந்து 120 வயது வரை நீண்ட ஆயுளோடு வாழ்வார்கள்

புண்ணிய நதிகளின் நீர், மண்ணிலே தெய்வங்களை இருக்கச்செய்து தூய்மை பெறுவதே கும்பம் வைப்பதும் ஹோமம் செய்வதும் மரபாயிற்று. அதனால் தான் சௌனகரும் 4 தீய கிரஹங்களின் பிடியிலிருந்து விலகி, பல காலம் வாழ்வதற்கு நீர் நிரம்பிய கும்பத்திலே தெய்வங்களை ஆவாஹனம் செய்து, அபிஷேகம் செய்து கொள்வது. நெருப்பிலே துஷ்ட கிரஹங்களின் சக்திகளை எரித்து ஹோமம் செய்துகொண்டு ரக்ஷை தரித்துக் கொண்டு பலகாலம் வாழ்வதற்கு சாந்திகர்மாவை வகுத்துத் தந்தார்கள்.

சஷ்டியப்த பூர்த்தி சாந்தி செய்யும்முறை

சாந்திக்கு முதல்நாள் காலை கர்த்தா தம்பதியுடன் அனுக்ஞை செய்து ஸ்நான சங்கல்பம் ஆச்சார்யரால் புண்ணிய தீர்த்தத்தில் செய்து வித்து மகாகணபதியை பிரார்த்தித்து அர்ச்சனை செய்தல் 1

பிறகு நாந்தி சோபனம் அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை புண்ணியாஹ வாசனம் செய்து நாந்தி சோபனத்திற்கு ஒன்பது பேர்களை வரித்தல், பிறகு தீபலெட்சுமிபூஜை முதலியன செய்தல் 2

அன்று மாலை அனுக்ஞை புண்ணியாஹ வாசனம், தீபலெட்சுமி பூஜை செய்து பூர்வாங்கமாக கோதானம், தெசதானம், வைஷ்ணவ சிரார்த்தம், கிரஹப்ரீதி முதலியவற்றை செய்து ஆச்சார்ய வர்ணம் (வேண்டி வரித்தல்) ஆச்சார்ய மற்றும் ஜெப பிராமணாளுக்கு வஸ்திரம் கொடுத்தல் 3

பிறகு சஷ்டி அப்த பூர்த்தி சாந்தி கலசம் 64க்கும், தனியாக ஒரு கலசம் ஆயுர் தேவதைக்கும் கலசத்தில் தேவதையை ஆவாஹறணம் செய்து, பூஜை செய்து, அர்ச்சனை செய்தல் 4

பிறகு கர்த்தாவினுடைய நட்சத்திரங்களை கேட்டு சங்கல்பம் செய்து கீழ்க்கண்ட பாராயணங்களை ஜெப பிராமணாள் செய்வார்கள்

1. கணேச பஞ்சரத்னம்
2. விஷ்ணுசகஸ்ரநாம பாராயணம்
3. இந்திராக்ஷி
4. சிவகவசம்
5. லக்ஷ்மி அஷ்டோத்ரம்
6. லக்ஷ்மி அஷ்டகம்
7. மார்கண்டேயன்ஸ்தோத்திரம் 5

பாராயணங்கள் முடிந்தவுடன் சிவன்கோவில் சிவாச்சாரியார் தீபாராதனை காண்பித்து திராவிட வேதம் என்று சொல்லப்படுகின்ற தேவாரம், திருமுறை, பாடி முடித்தவுடன் கடைசியாக தீபாராதனை காண்பித்து சிவாச்சாரியார் விபூதி பிரசாதம் கொடுத்து அன்று மங்கள வாத்தியம் முழங்க பிரசாதத்துடன் முதல் நாள் கால பூஜை முடிவடையும். நமஸ்காரம் சூரிய நமஸ்காரம் வகையறா எட்டும் கொடுத்தல் 6

சஷ்டி அப்தபூர்த்தி சாந்தி அன்று முதல் நாள் இரவு பாராயணங்களுடன் ஆதித்ய ஹ்ருதயம், நவக்ரஹ ஜெபம் முதலியவைகளையும் சேர்த்து பாராயணம் செய்தல் 7

ஜெபம் முடிந்தவுடன் கர்த்தா தம்பதி மற்றும் அவர்களுடைய குடும்பத்தாருடைய நக்ஷத்திரங்களை கேட்டு ஆயுஷ்ய ஹோமம் ஜெப பிராமணாள் ஐந்துபேரை வைத்து ஹோமம் செய்தல்.
பின்பு பூர்ணாகுதி செய்தல், சாந்தி ஹோமம் ஜெப பிராமணாள் பத்து பேரை வைத்து கர்த்தா, தம்பதியுனுடைய நக்ஷத்திரங்களைச் சொல்லி ஹோமம் செய்தல், பின்பு பூர்ணாகுதி செய்தல், பின்பு நவக்கிரஹ ஹோமம் செய்து பூர்ணாகுதி செய்தல். 8

பிறகு கர்த்தா தம்பதிகளுடன் தீபாரரதனை முடிந்து தெரிசனம் முடிந்தவுடன் குடும்பத்தாருடன் கலசங்களையும் ஹோம குண்டங்களையும் மூன்று முறை வலம் வந்து தெரிசனம் செய்தல். கர்த்தா தம்பதியுடன் பிரதான கலசமான சுவாமி அம்பாளுக்கு அர்ச்சனை செய்தல். பிறகு கலச தேவதைகளை யதாஸ்தானம் செய்தல் 9

பிறகு பஞ்சதானமான துர்தானங்கள் ஐந்தையும் செய்தல்.

1. உப்பு 2. பருத்தி
3. அயதண்டம் 4. கடுத்தகம்பளி
5. அயபாத்திரம் (சிறு இருப்புச் சட்டியில் எண்ணை ஊற்றி தானம் செய்தல்) மேற்கூறிய தானங்களை தெக்ஷனை தாம்பூலத்துடன் கொடுத்த பின்னர் யாத்திரா தானம் செய்யவேண்டும். 10

பிறகு கர்த்தா தம்பதிகளை கோடி வஸ்திரத்துடன் கிழக்கு முகமாக உட்கார வைத்து மாலை போட்டு கையில் தேங்காயை இருவருக்கும் கொடுத்து குடும்பத்தாரை பின்னால் இருக்கச்சொல்லி புண்ணியாஹ வாசன ஜலதத்தையும் பிரதான கலச ஜலத்தையும் தெளித்து ஆச்சாரியரும், நகர சிவாலய சிவாச்சாரியாரும் பிரதான கலச ஜலத்தை சஷ்டி அப்த பூர்த்தி தம்பதியருக்கு அபிஷேகம் செய்தல், பிறகு வந்திருப்பவர்களில் பெரியவர்கள் தம்பதியுடன் அபிஷேகம் செய்த பின்னர், பந்து ஜனங்கள் அபிஷேகம் செய்த பின், கடைசியாக புதல்வர்கள் மாப்பிள்ளைகள் துணைவியருடன் வலம் வந்து தாய் தந்தையருக்கு அபிஷேகம் செய்வர். 11

பிறகு நூதன வஸ்திரம் கட்டிக்கொண்டுவந்து கிழக்கு முகமாக உட்கார்ந்த பின் தீர்த்தம் விபூதி சந்தனம் குங்கும பிரசாதங்களைக் கொடுத்தபின் தம்பதிகள் நெய் நிழல் தானம் செய்தபின், ஜலத்தைத் தொட்டு கண்களை துடைத்துக்கொண்டு கண்ணாடியில் முகத்தைப் பார்க்க வேண்டும். 12

தெசதானம் 10ம் கொடுத்தல் நவக்ரஹதானம் 9ம் கொடுத்தல்
ஷட்தானம் 6ம் கொடுத்தல் மஹாதானம் 20ம் கொடுத்தல் 13

<u>தம்பதி பூஜை</u> பிராமணாள் தம்பதிகளை கிழக்கு முகமாக உட்கார வைத்து இருவருக்கும் புது வஸ்திரங்களை கொடுத்துஅணிந்து வரச் சொல்லி வந்தபின் அவர்களுக்கு பூஜை செய்து கர்த்தா, திருமாங்கல்யத்தை எடுத்து பிராமணாளிடம் கொடுக்க கெட்டி மேளத்துடன் அந்த பிராமணாள் தன் துணைவியாருக்கு திருமாங்கல்யதாரணம் செய்வார். பிறகு தெக்ஷிணை தாம்பூலத்துடன் கொடுத்தபின் அவர்களிடம் ஆசிபெற்று, அக்ஷதை விபூதி குங்குமப் பிரசாதம் பெற்று மங்கள வாத்தியத்துடன் தம்பதிகளை வாசல்வரை வழி அனுப்பிவைக்க வேண்டும். 14

பிறகு சங்கல்பம் செய்து விக்னேஸ்வர பூஜை செய்தல். திருமாங்கல்ய பூஜை செய்தல், செய்தபின் பெரியோர்களிடம் ஆசிபெற திருமாங்கல்யத்தை தாம்பூலத்தில் உள்ள மாலையுடன் கொடுத்தல், பிறகு கிரஹப்ரீதி செய்தல். 15

திருமாங்கல்யம் ஆசிபெற்று வந்தபின், புரோகிதரால் வழக்கப்படி அவர்கள் குடும்பத்தில் பெரியவரிடம் கொடுத்து அவர் கர்த்தாவிடம் கொடுத்து, அவர் துணைவியார் கழுத்தில் திருமாங்கல்யதாரணம் செய்வார். பிறகு மாலை மாற்றிக் கொள்ளுதல், பலதானம் செய்தபின் ஆசார்ய தக்ஷிணை கொடுத்தல், சாதகாசார்ய தக்ஷிணை கொடுத்தல். சூர்ய நமஸ்கார வகையறா எட்டுக்கும் தக்ஷிணை கொடுத்தல். சுவாமி பிரசாதம் பெற்றுக்கொள்ளுதல், பெரியவர்களிடம் ஆசிபெற்று விபூதி குங்குமம் பெற்றுக்கொள்ளுதல் பிறகு தனக்கு வயதில் சிறியோருக்கு ஆசி வழங்கல். பிறகு வயதுவந்த சிவாச்சாரியாரிடம் அனைவரும் ஆசிபெறல். சிவாலயம் சென்று ஈஸ்வர தரிசனம் செய்தல். வீடு வந்து சேர்ந்த பின் மாலை 6-00 மணிக்குமேல் திருஷ்டி பூசணி சுற்றி கழித்துக் கொள்ளவேண்டும்.

சஷ்டி அப்த பூர்த்தி சாந்திக்கு தேவையான சாமான்கள் விபரம்

மஞ்சள் பொடி	200 கிராம்	வெற்றிலை	2 கவுளி
பட்டணம் மஞ்சள்	250 கிராம்	சுருள் பாக்கு	200 கிராம்
குங்கும டப்பா	2	கற்கண்டு	500 கிராம்
ஊதுபத்தி பாக்கெட்	1	கிஸ்மிஸ்	500 கிராம்
சூடம் 1 பாக்கெட்	100 கிராம்	பேரிச்சம்பழம்	500 கிராம்
10 நெ. நூல் கண்டு டஜன்	4	நெல்	21 பெ.படி
5 கலர் நூல் கண்டு	5	பச்சரிசி	21 பெ.படி
(சிகப்பு, ரோஸ், மஞ்சள், பச்சை, நீலம்)		வெல்ல அச்சு	3 கிலோ
வெட்டி வேர்	ரூ. 2-00	கோதுமை	500 கிராம்
விளா மிச்சை வேர்	ரூ. 2-00	துவரை	500 கிராம்
பச்சைக் கற்பூரம்	ரூ. 4-00	பாசிப் பயறு	500 கிராம்
ஏலக்காய்	ரூ. 4-00	கொண்டைக்கடலை	500 கிராம்
குங்குமப்பூ	ரூ. 5-00	மொச்சை	500 கிராம்
ஆண்பாள் ஸ்நானப்பவுடர்	200 கிராம்	எள்ளு	500 கிராம்
தேங்காய்	75	உளுந்து	500 கிராம்
வாழைப்பழம்	75	கொள்ளு	500 கிராம்

நாந்தி சோபனத்திற்கு

வாழைக்காய்	18	கதம்ப புஷ்பம்	25 முழம்
வாழை இலை அடுக்கு	11	கலசம் (தாமிரம்)	65
நல்லெண்ணை	அரை கிலோ	கலச மாலை	65
நெய்	1 கிலோ	பிரதான கலசத்துக்கு மாலைகள்	
உப்பு	ரூ.2-00	நந்தி சோபனத்திற்கு கர்த்தாவுக்கு	
பருத்திக்கொட்டை	ரூ. 2-00	மாலைகள்	2
தேன்	200 மில்லி	அன்றிரவு கர்த்தாவுக்கு மாலைகள்	2
சந்தனம்	200 கிராம்	சாந்தி தினம் கர்த்தாவுக்கு மாலைகள்	2
பன்னீர் பாட்டில் பெரியது	2	வாழைக்கன்று	4
பால்	200 மில்லி	தென்னக்குருத்து	2
வில்வம்	சிறு குடலை 1	தீபாராதனை சாமான்கள்	
உதிரி புஷ்பம்	சிறு குடலை 1	தொன்னைக் கட்டு	1

ஒரு சாண் நீளத்தில் சமித்து வகையறா

எருக்கு –சூரியன்	நாயுருவி–புதன்	வன்னி–சனி
அத்தி–சந்திரன்	அரசு–வியாழன்	அருகு–ராகு
கருங்காலி–செவ்வாய்	புரசு–சுக்கிரன்	பச்சை தர்பை–கேது
		சீந்திக்கொடி–108

பச்சை நெல் உமி – 1 கிலோ
மாங்கொப்பு – 1 சாக்கு
கெங்கா தீர்த்தம்
காவேரி தீர்த்தம்
சேது தீர்த்தம்
பொற் தாமரை தீர்த்தம்
சத்திய புஷ்கரணி தீர்த்தம்
இதர புண்ணிய தீர்த்தங்கள்

மணல் வகையறாக்கள்:
கன்னியாகுமரி மணல்
காவேரி மணல்
சேது மணல்
யானையடி மண்
வில்வ மரத்து மண்
புத்து மண்
பசுவின் குழம்பு மண்

ஜவுளி வகையறாக்கள்:

அனுக்ஞை 8 முழ வேஷ்டி 1
துண்டு 1
ஜெப பிராமணாள் 64 பேருக்கு
8 முழ வேஷ்டி 64
மேற்படிக்கு துண்டு 64
நாந்தி சோபனத்திற்கு 8 முழம்
வேஷ்டி 9, மேற்படிக்கு துண்டு 9
சூரிய நமஸ்காரம் வகையறா 8க்கு
8முழம் வேஷ்டி 8

மேற்படிக்கு துண்டு 8
தானத்திற்கு 8 முழம் வேஷ்டி 2
மேற்படிக்கு துண்டு 2
வேதிகா வஸ்திரம் மேட்டூர் மல்
முழம் 16
கலசம் 65க்கு
கும்பத் துணடு 56-ம் நவக்ரஹ
கலசத்திற்கு கலர் வஸ்திரம் 9-ம்
ஆக 65

சூரியனுக்கு	சிவப்பு–புதன்	பச்சை–சனி	நீலம்
சந்திரனுக்கு	வெள்ளை–குரு	மஞ்சள்–ராகு	கருப்பு
செவ்வாய்க்கு	சிவப்பு–சுக்கிரன்	வெள்ளை–கேது	சித்ர வர்ணம்

(பல கலர் வஸ்திரங்கள்)

தம்பதிகளுக்கு 8 முழ வேஷ்டி 1, துண்டு 1,
9 கெஜம் புடவை 1,
80 செ.மீ. ரவிக்கை துணி 1
சீப்பு 1, கண்ணாடி 1,
குங்குமச் சிமிழ் 1,
பிளாஸ்டிக் வாளி 2,
தீபலெட்சுமி பூஜைக்கு 9 கெஜம் புடவை 1,
80 செ.மீ. ரவிக்கை துணி 1,
சீப்பு 1, கண்ணாடி 1,
கர்த்தாவிற்கு அபிஷேகத்திற்கு 4 முழம் வேஷ்டி 1-ம்,
துண்டு 1-ம், ஆக உருப்படி 2.
ஆச்சிக்கு அபிஷேகத்திற்கு 6 கெஜம் வாயில் புடவை 1,
கடுத்த கம்பளி 1,

பாத்திர வகையறாக்கள்:

புண்ணியாஹ வாசனத்திற்கு		பிரதான கலசத்திற்கு	
பித்தளை செம்பு	1	தங்கத்தகடு	2
கலசம்	65	கலசம்	63
பூஜை தாம்பாளம் பெரிது	1	வெள்ளித்தகடு	63
பஞ்ச பாத்திர உத்தரணி	1	தானத்திற்கு தங்கத்தகடு	1
ஹோமத்திற்கு பித்தளை டவரா	3	தானத்திற்கு வெள்ளித்தகடு	1
நெய் நிழல் தானத்திற்கு டவரா	1	மணி	1
சூரிய நமஸ்காரத்திற்கு செம்பு	1	விளக்கு	1
பஞ்ச பாத்திர உத்தரணி	8	தடிக்கம்பு	1
சிறு இருப்புச்சட்டி	1	தானத்திற்கு செம்பு	1
அயதண்டம் (இரும்பு கம்பி)	1		

திருவிளையாடல் புராண புத்தகம்	1	தீபக்கால்	1
விபூதிப் பை	1	போர்வை	1
ருத்திராக்ஷம்	1	நார்மடி	1
விசிறி	1	பால் முறி கிண்ணம்	1
குடை	1	தயிர் முறி கிண்ணம்	1
மடிசஞ்சி	1	தேன் முறி கிண்ணம்	1
ஆசனப் பலகை	16	நவநீதம் (வெண்ணை)	
பாத குரடு	1	முறிகிண்ணம்	1
தூபக்கால்	1		

செய்யா தானத்திற்கு	மெத்தை தலையணை	
உபநயன தானம் இவைகள் ரொக்கமாக		பணம் வழங்குதல்
கன்யாதானம்		பணம் வழங்குதல்
கிரஹ தானம்		பணம் வழங்குதல்
பூமி தானம்		பணம் வழங்குதல்
நவக்ரஹதானத்திற்கு பிளாஸ்டிக் டப்பா		9
பூமிதானத்திற்கு சந்தனக்கட்டை		1
ஜெபதட்சனை - ஆச்சார்ய சம்பாவனை		பணம் வழங்குதல்

சஷ்டி அப்த பூர்த்தி சாந்தி தேவதைகளின் விபரம்:

1. சுவாமி அமிர்தம் மிருத்யுஞ்சயர்
2. அம்பாள் அமிர்தேஸ்வரி
3. பிரம்மா
4. விஷ்ணு

5 முதல் 12 வரை அஷ்டதிக்பாலகர்

இந்திரன் (கிழக்கில்)
எமன் (தர்மராஜர்) (தெற்கில்)
வருணன் (மேற்கில்)
குபேரன் (வடக்கில்)

அக்னி (தென்கிழக்கில்)
நிருதி (தென் மேற்கில்)
வாயு (வடமேற்கில்)
ஈசாநன் (வடகிழக்கில்)

13 முதல் 19 வரை ஸப்த ரிஷிகள்
1. கருப்பர்
2. அத்ரி
3. பரத்வாஜர்
4. விஸ்வாமித்திரர்
5. கௌதமர்
6. ஜமதக்னி
7. வசிஷ்டர் மனைவி (அருந்ததி)

20 முதல் 26 வரை ஸப்த சிரஞ்சீவிகள்
1. அச்வத்தாமா
2. மஹாபலி
3. வியாசர்
4. ஹனுமார்
5. விபீஷணர்
6. கிருபாச்சாரியார்
7. பரசுராமர்

27. மார்கண்டேயர்

28 முதல் 55 வரை நக்ஷத்திர தேவதைகள் 28

56 முதல் 64 வரை நவக்ரஹ தேவதைகள்
1. சூரியன்
2. சந்திரன்
3. செவ்வாய்
4. புதன்
5. வியாழன்
6. சுக்கிரன்
7. சனி
8. ராகு
9. கேது

65 சஷ்டி தேவி

வேதிகை விபரம்:

5 1/2 அடி × 8 1/2 அடி தன்ன சதுரத்தில் தனியாக வடகிழக்கில் ஒரு கலசம் வைப்பதற்கு உரிய தன்ன சதுரத்தில் கலச மேடை உயரத்திற்கு திட்டு ஒன்று கலச மேடைக்கு முன்னால் இரண்டு அடி இடைவெளி விட்டு மூன்று ஹோம குண்டம் அமைக்கவேண்டும்.



நாற்கோண வடிவமுள்ள ஹோம குண்டத்தில் அரசம் சமித்தும் பசுவ நெய்யுங்கொண்டு ஆயுஷ்ய ஹோமம் செய்து, எண்கோண குண்டத்தில் சீந்திக்கொடி பசுநெய்கொண்டு மகாமிருத்யுஞ்ஜய ஹோமம் செய்து வட்ட வடிவமுள்ள குண்டத்தில் வெள்ளெருக்கு, புரசு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அருகம்புல், தர்பை இந்த ஒன்பது சமித்துக்களும், பசு நெய்யுங்கொண்டு நவக்ரஹ ஹோமம் செய்து பூர்ணாகுதி செய்தல் வேண்டும்.

சுபம். ஷண்முகநாதன் துணை.

நகரத்தார் விசேடங்கள்

1. பிள்ளையார் நோன்பு:-

தொன்று தொட்டே மரகத விநாயகரை வழிபட்டு வரும் இரத்தின தன மகுடவைசியர் எனப்படும் நகரத்தார் சமூகத்தில் மட்டுமே நடைமுறையில் கொண்டாடப்படும் விசேஷம் இது. இவ்விரதம் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் அமர பட்ச பிரதமை முதல், மார்கழி மாதம் பூர்வபட்சம் சஷ்டி திதியுடன், நிறைவடைகின்ற 21 நாள் விரதத்தை நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு நூலிழையாக 21 இழைகளை ஒன்று சேர்த்து எடுத்து மஞ்சள் நீராட்டி, விநாயகருக்கு அபிஷேகம், அலங்காரம் செய்து ஆடை சாத்தி. மாலை சூட்டி ஆவாரங்குச்சியில், நெல் நாற்று, கன்றுப்பிள்ளைப்பூ, வண்ணக்காய், மாவிலை, ஆவரம் பூக்களும் இணைத்துக்கட்டி, விநாயகரின் வலப்பக்கம் வைத்து அவல், பொரி, கடலை, எள்ளுருண்டை, மோதகம், தேங்காய், பழம், பச்சரிசிமாவில் தேன், ஏலம், சுக்கு, சர்க்கரை, நெய் சேர்த்து உருண்டையாக்கி, நெய் ஊற்றி 21 இழை திரியாகப்போட்டு, கருப்பட்டி பணியாரம் மற்றும் சில பட்சனங்களையும் செய்து வைத்து படைத்து, தீபம் ஏற்றி நைவேத்தியம் செய்து, அத்தீபத்துடன் மாவிளக்கு மாவை உண்டு, நோன்பைப் பூர்த்தி செய்து கொள்வது மரபு. மாவிழையில் நெய் தீபம் ஏற்றிக்கொடுப்பது குடும்பத் தலைவருக்கு உள்ள உரிமை.

2. காப்புக் கட்டுப் புதுமை:-

நகரத்தார் சமூகத்தில் சற்றேறக்குறைய நாற்பது ஆண்டு களுக்கு முன்னர் வரை நடந்த விழாக்களில் இதுவும் ஒன்று.

இவ்விழா முதலில் பிறக்கும் ஆண் குழந்தை அல்லது பெண் குழந்தைக்கு இரண்டாம் வயதில் செய்யும் புதிய சடங்கு என்பதால் இதற்கு புதுமை என்று பெயர் வந்தது.

பிராமண புரோகிதரால் புதுமைக்கு நல்ல நாள் குறித்து, குழந்தையின் தாய் மாமன் வீட்டிலிருந்து பற்பல சீர்களும் வரப்பெற்று குறித்த நாளில் ஆடை, ஆபரணங்களணிந்து, அழகுமிகு பாசிகளால் உயர்ந்த முத்து ஆரங்களைப் போல நல்ல மாலைகளாக்கி. உயிர்நிலையாக, மார்பில் மாறுதலாகத் தொங்கக்கட்டி, தூப தீபம் காட்டி, திருநீற்றுக் காப்பணிந்து, பட்டாடை உடுத்தி, ஒரு மரவையின் மீது அமரச்செய்து, நிலை

விளக்கு ஏற்றிவைத்து, அக்குழந்தையின் தாயும், தாய்மாமனும், தந்தையுடன் பிறந்த அத்தையும் ஆகிய மூவரும் மரவையுடன் குழந்தையை தூக்கி மூன்று தரம் வலம் சுற்றி வாழ்த்திப் பெரியோர்களை நோக்கி, "இப்புதல்வனுக்கு இன்று முதல்தான் பாசமாகிய பாசியால் பந்தித்திருக்கிறது" என்று சொல்லிக் கொடுக்க, ஒவ்வொரு பெரியோரும் வாங்கி ஆசீர்வதம் செய்தவுடன் பழம், காப்பரிசி வழங்குவார்கள். குழந்தைக்கு தாய்மாமன் மற்ற அனைத்து உறவினர்களையும் விட அதிகமான தொகையினை மொய்ப்பண அன்பளிப்பாக வழங்குவார்.

2. கார்த்திகைப் புதுமை:-

நகரத்தார் சமுகத்தினர் தங்களுக்குத் திருமண வயதில் ஆண்மகன் இருக்கிறான் என்பதை சுற்றத்தினருக்குத் தெரிவிக்கின்ற நிகழ்ச்சியே "கார்த்திகைப் புதுமை" என்ற பெயரால் நடைபெற்று வந்துள்ளது. இது கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை அன்று நடைபெறும். இதனைச் சூப்பிடி அல்லது சூழ்பிடி என்றும் கூறுவார்கள்.

கார்த்திகைப் புதுமை நாளன்று தங்கள் இல்லத்தில் வாழைமரம் ஒன்றை நாட்டி அதன்மேல் பெரிய அகலில் எண்ணை ஊற்றிப் பெரிதாகத் திரிப்போட்டு வைத்து, வாழைமரத்தின் நடுவில் சதுரமாக இரண்டு தட்டில் அநேக தீபமேற்றி வைப்பதற்குத் தேவையான அமைப்புகளைச் செய்து, மரத்தைச் சுற்றிலும் கோலமிட்டு அலங்கரித்து, மேளம், நாதஸ்வர ஒலி முழங்க, மங்களகரமான குதிரை மீது ஏற்றித் தேங்காய், பழம் முதலியவற்றுடன் சங்கொலியும் முழங்க, பிள்ளையார் ஆலயம் சென்று தெரிசனம் செய்து சூழ்ந்து நின்று பெரிய அகல் விளக்கை கொளுத்திக் கொடுத்து பிடிக்கச்செய்து, சொக்கப்பானைக் கொளுத்திப் பூரணமாக எரியும்போது மணக்கோலமுடையானை, தெரிசிக்கச் செய்து ஆலயத்தினுள் சென்று இறைவனை வழிபட்டு, முன்போல மங்கள வாத்தியம் முழங்க குதிரை மீதேற்றி ஊர் ஆலத்தி எடுக்கப்பெற்று, ஊர்வலம் வந்து இல்லம் சேர்ந்து, பெண்களாகச் சடங்கு ஒன்று நடத்தி நிறைவு செய்வது மரபு. தற்காலத்தில் இது நடைமுறையில் இல்லாத விழா.

3. திருவாதிரைப் புதுமை:-

ஆண் மக்களுக்கு கார்த்திகை புதுமை செய்வதுபோல் திருமணத்திற்குரிய பருவமடைந்த பெண் இருக்கிறாள் என்பதை

சுற்றத்தார் அறியச் செய்யும் நிகழ்ச்சியாகத் திரவாதிரைப் புதுமை நடத்தப் பெற்றிருக்க வேண்டும்.

இப்புதுமை மார்கழி மாதத்தில் வரும், திருவாதிரை நாளில் நடைபெறும். பெண் திலகமான ஆதிரை என்பவள், மணிமேகலையில் குறிப்பிடப்பெறும் நகரத்தார் மரபினள். மணிமேகலைக்கு அமுதிட்ட ஆதிரை, மணிமேகலையைவிட உயர்ந்தவள். ஆதிரையிட்ட பிச்சை உலகப் பசிப்பிணியையே போக்கியது. இதைக் கருத்தில்கொண்டே திருவாதிரை விழாவின் போது மணச் சிறுமி, திருவாதிரை கழுத்துருவுடன் நல்ல ஆடை அணிமணிகளும் அணிந்து தாய்மாமனுடன், அன்று காலை ஏழு குளங்களிலிருந்து சிறிது ஈர மண்ணும், ஏழு செடிகளி லிருந்து பலநிறப் பூக்களும் எடுத்து வைத்து பின்னர், தங்கள் வகுப்பைச் சேர்ந்த ஏழு அல்லது ஒன்பது வீடுகளுக்குச்சென்று,

"ஆடி ஆடி வாரோம் அவரக்காய் போடுங்க
பாடிப் பாடி வாரோம் பாடவரங்காய் போடுங்க
கூடிக் கூடி வாரோம் கொத்தவரங்காய் போடுங்க."

என்று உண்ணும் பொருள்களைக் கேட்டு வாங்கிக் கொண்டுவந்து, திருவாதிரைக் களி எனும் சுவைமிகு இனிப்பு உணவு தயாரித்து, கூட்டுக் குளம்பும் வைத்து திருவாதிரை அடை சுட்டு அதில் எழுத்தாணி முனையால், மணப்பெண்ணின் கையால் 108 துளைகளிட்டு கௌரி மந்திரம் சொல்லி படைப்பது வழக்கம். இத்தோசைகள் அனைவருக்கும் வழங்கப்பெறும். பின்னர் உறவினர் சூழ ஆலயம் சென்று வழிபட்டுத் தன் தாயார் அல்லது தாய்மாமனால் காலையில் வைத்த பூக்களையும், மண்களையும் எடுத்துப் புதுமைப் பெண்ணின் சிரத்தை மும்முறை சுற்றிக் காலில் போட்டு, பூரத்துடன் வழிபாடு செய்து சடங்கினை நிறைவு செய்வர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்

நகரத்தார்கள் யார்?:-

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இந்தியாவில் தமிழ்நாட்டில் தற்காலத்தில் சிவகங்கை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகியவைகளில் உள்ள 78 ஊர்களில் வசித்து வருகின்றனர். இவ்வெழுபத்தெட்டு ஊர்களும் கிழக்கு மேற்கில் 50 கிலோ மீட்டர் நீளமும், தெற்கு வடக்கில் 50 கிலோ மீட்டர்

அகலமும், உள்ள ஓர் சதுர நிலப்பரப்பில் அமைந்துள்ளன.

"நாட்டுக்கோட்டை செட்டி" பெயர் வரக்காரணம் :-

தொன்று தொட்டு தன வணிகர் பணமே நகரச் செழிப்பிற்குக் காரணமாய் இருந்தது. எனவே அவர்களை நகரத்தார் (9 நகரத்தில் முதன்மையானவர்) என்று சிறப்பித்தனர். நகரங்களுக்குக் கோட்டைகள் உண்டு. இக்கோட்டைகளின் பாதுகாப்பிலிருந்து தன வணிகர் தொழில் நடத்தினர். இக்கோட்டை கட்டுவதற்கும் வணிகர் பணமே சிறப்பாக உதவியது. எனவே அவர்களை அக்கால மன்னர்கள் கோட்டையார், நாட்டுக்கோட்டையார் என்று அழைத்திருக்கலாம்.

நகரத்தார்களின் பெருமைமிகு பணிகள் :-

கொள்வினை கொடுப்பினைக்காக கோயில் அடிப்படையில் ஒன்பதாகப் பிரித்துள்ளனர். கலாமடம், துளாவூர் மடம், பாதரக்குடி மடம், ஆகியவை நிறுவி ஆண்களும், பெண்களும் தனித்தனி மடங்களில் சமய தீட்சை பெற்று வருகின்றனர். இது தவிர திருவண்ணாமலை ஓயாமடம், குன்றக்குடி சிவாமடம், பழனி அன்னதான மடம் நிறுவி பசிப்பிணி போக்கியுள்ளனர்.

1. கோவில் திருப்பணி, பழுது பார்த்தல், குட முழுக்கு செய்தல்,
2. திருத்தலங்கள் தோறும் தங்கும் விடுதிகள் அமைத்தல்.
3. தேவாரம், திருவாசகம், வேதம் ஓதுவிக்கப் பாடசாலைகள் அமைத்தல்.
4. பசுமடம் கட்டுதல்
5. அன்னதான மடங்கள் நிறுவுதல்
6. பூசை மலருக்காக திரு நந்தவனங்கள் உண்டாக்கல்
7. தண்ணீர் பந்தல் நிறுவுதல்
8. திருக்குளம் அமைத்தல்
9. திருவிழாக்கள் நடத்துதல்
10. விளக்கேற்றுவித்தல்
11. பெரியபுராணம், கந்தபுராணம், காவேரிப்புராணம், கம்பராமாயணம், படித்து சொற்பொழிவு நிகழ்த்துதல்.
12. தெய்வங்கட்கு பொன், வெள்ளியிலான அங்கிகள், தங்கம், வெள்ளி ரதங்கள், வாகனங்கள், சப்பரங்கள், திருத்தேர்கள், திருவாபரணங்கள் நல்குதல்.


சுபம்!

வாழ்க வளமுடன்!

பண்பாடு

கோபத்திலும்	பொறுமை
செல்வத்திலும்	எளிமை
ஏழ்மையிலும்	நேர்மை
தோல்வியிலும்	விடாமுயற்சி
துன்பத்திலும்	துணிவு
பதவியிலும்	பணிவு
எக்காலத்திலும்	தெய்வபக்தி
கல்வியில்	ஆர்வம்
கடமையில்	பற்று
பேச்சில்	சிக்கனம்

உண்மையும் உழைப்பும் உயர்வு தரும்,
விடா முயற்சி வெற்றி தரும்
அன்பும், அடக்கமும் அனைத்தும் தரும்.



கற்பக விநாயகர் ஆலயம், பிள்ளையார்பட்டி.